කඳුරට නව ගම්මාන, යටිතල පහසුකම් හා ප්‍රජා සංවර්ධන අමාත්‍යාංශය

மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு

Ministry of Hill Country New Villages, Infrastructure and Community Development



# කාර්යසාධනය (ප්‍රගතිය) 2017 සහ ඉදිරි වැඩසටහන්

## 2017-செயலாற்றுகை (முன்னேற்றம்) மற்றும் எதிர்கால நிகழ்ச்சித்திட்டங்கள்

# Performance (Progress) 2017 and Future Programmes

# කාර්යසාධනය (ප්‍රගතිය) 2017 සහ ඉදිරි වැඩසටහන්

# 2017-செயலாற்றுகை (முன்னேற்றம்) மற்றும் எதிர்கால நிகழ்ச்சித்திட்டங்கள்

# Performance (Progress) 2017 and Future Programmes

කඳුරට නව ගම්මාන, යටිතල පහසුකම් හා ප්‍රජා සංවර්ධන අමාත්‍යාංශය

மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு

Ministry of Hill Country New Villages, Infrastructure and Community Development

**කාර්යසාධනය (ප්‍රගතිය) 2017 සහ**
**ඉදිරි වැඩසටහන්**

2017 - செயலாற்றுகை (முன்னேற்றம்) மற்றும்
எதிர்கால நிகழ்ச்சித்திட்டங்கள்

**Performance (Progress) 2017 and**
**Future Programmes**


කඳුරට නව ගම්මාන, යටිතල පහසුකම් හා ප්‍රජා සංවර්ධන අමාත්‍යාංශය
மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு
Ministry of Hill Country New Villages, Infrastructure and Community Development

P.O. Box 562, No. 45, St. Michale's Road, Colombo 03.
Tel: 0112 541 369 Fax : 0112 328 117
Email : smpid@sltnet.lk / mhplanning2016@gmail.com
Web site www.mhnv.gov.lk



Printed with VOC free, non toxic vegetable oil-based environmentally-friendly ink, on 100% recycled paper using wood free pulp which is made from 100% post consumer waste paper
*(Paper recycling is the process of recovering waste paper and remarking it into new paper products.)*

Recycling one ton of paper saves
17 mature trees, 26 m3 of water, 2.3 m3 of disposal space, 320 liters of oil, and 4,100 kilowatt-hours of electricity.

**We encourage you to recycle this document after use.**

Printed by Printec Establishment (Pvt)Ltd - www.printec.lk

# மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு

## செயலாற்றுகை அறிக்கை 2017

## மற்றும்

## எதிர்கால நிகழ்ச்சித் திட்டங்கள்

## தொலைநோக்கு

பெருந்தோட்டத்துறை சமூகத்தை ஏனைய
சமூகங்களுடன் சரிசமமாக இருக்கும் வகையில்
கௌரவம், சுயமரியாதை மற்றும்
சமூக அந்தஸ்துடன் கூடிய
ஒரு கிராமிய சமூகமாக நிலைமாற்றுதல்.

## குறிக்கோள்

வாழ்விடம், வாழ்க்கைத் தரம் மற்றும்
சமூகப் பொருளாதார வசதிகளை
முன்னேற்றுவதனூடாக
பெருந்தோட்டத்துறைச் சமூகத்தின்
நலன்களை மேம்படுத்தல்.



# உள்ளடக்கம்


**01. அறிமுகம்**

**02. அமைச்சை தாபித்தல்**

**03. அமைச்சின் நிறுவன ஒழுங்கமைப்புதட தற்போதைய பதவியணியினரும்**

**04. அமைச்சின் அபிவிருத்தி அணுகுமுறைகளும் முன்னுரிமைகளும்**

4.1 அபிவிருத்தி அணுகுமுறைகளும் முன்னுரிமைகளும்

4.2 அபிவிருத்திக் கருத்திட்டங்களை அமுல்படுத்தும் பொறிமுறையும் நிறுவனக் கட்டமைப்பும்

**05. 2017 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடும் நிதி முன்னேற்றமும்**

**06. அமைச்சின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களும் முன்னேற்றங்களும்**

6.1 மலைநாட்டு புதிய கிராமங்களுக்கான வீடுகள்

6.2 பின்தங்கிய பிரதேசங்களில் சமூக பொருளாதார அபிவிருத்தி

6.3 வாழ்வாதார அபிவிருத்தி

**07. அமைச்சினால் 2017 ஆம் ஆண்டில் பெறப்பட்ட விசேட வெற்றிகள்**

**08. அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்கள்**

8.1 பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம்

8.2 பிரஜாசக்தி கண்காணிப்பு பிரிவு

**09. அமைச்சின் எதிர்பார்ப்புகளும் 2018 ஆம் ஆண்டிற்கான முதலீடுகளும்**

**10. அமைச்சின் அபிவிருத்தி நடவடிக்கைகள்**



மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர்
**கௌரவ பழனி திகாம்பரம் அவர்களின் செய்தி**

மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் உருவாக்கத்துடன், “லயன்” அறைகளில் வாழ்ந்து வந்த பெருந்தோட்ட மக்களை வலுப்படுத்தி கௌரவமான வாழ்க்கைக்கான தனி வீடுகளையும், தூய காணி உறுதிகளையும் வழங்குவதன் மூலம் அச்சமுதயாத்தை வீடொன்றிற்கான உரிமையாளராக்குவதற்குமான சிறந்த மாற்றம் உருவானது. பெருந்தோட்ட சமுதாயம் முகம்கொடுத்த பல இன்னல்களும், சமூக, பொருளாதார, அரசியல் ரீதியாக தனிமைப்படுத்துதலும் தகர்த்தெறியப்பட்டது.



இவ்வமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள ஆணையானது புதிய வீடுகளை நிர்மாணிப்பதன் மூலம் மாலைநாட்டில் புதிய கிராமங்களை உருவாக்குவதற்கு வழிவகுக்கின்றது. அதற்கமைய, அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் 2017.02.09 ஆம் திகதி நுவரெலியா மாவட்டம், அக்கரபத்தனை ஹூட்வில் தோட்டத்தில் புதிய கிராமம் திறந்துவைக்கப்பட்டது. அத்துடன் பயனாளிகளுக்கு தூய காணி உறுதிகளை வழங்கும் திட்டத்தையும் ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்ச்சித் திட்டத்தின் தொடர்ச்சியாக 2017 ஒக்டோபர் மாதம் ஹட்டன் பிரதேசத்தில் கௌரவ பிரதம மந்திரி அவர்களினால் 350 பயனாளிகளுக்கு காணி உறுதிகள் வழங்கப்பட்டன. இந்நடவடிக்கை தற்பொழுது தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்றது. வீடமைப்பத் திட்டங்களுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் வருடாந்த வரவு செலவு திட்ட நிதியொதுக்கீட்டின் ஊடாகவும், இந்திய அரசாங்கத்தின் நன்கொடையூடாகவும் இடம்பெறுகின்றது. இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள 4000 வீடுகளுக்கு மேலதிகமாக எதிர்வரும் வருடங்களில் மேலும் 10,000 வீடுகளுக்கான நன்கொடையையும் வழங்கவுள்ளது.

பெருந்தோட்ட சமுதாயத்தின் சமூக அபிவிருத்திக்கான தேசிய நடவடிக்கைத் திட்டம் உள்நாட்டு நிதியின் மூலம் அமுல்படுத்தப்படுகின்றது. தேசிய நடவடிக்கைத் திட்டத்தின் ஏனைய விடயங்களை அமுல்படுத்துவதற்காக வெளிநாட்டு நிதியை பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஹட்டன் பூல்பேங்க் தொழிற்பயிற்சி நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்காக இந்திய அரசாங்கம் ரூ.200 மில்லியன் வழங்கியுள்ளது. இதன் மூலம் வேலையற்ற இளைஞர்களுக்கு தொழில்வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுக்கக் கூடிய பயிற்சிகளை வழங்க முடியும். படித்த இளைஞர்கள் தகுந்த பயிற்சிகள் இன்றி தொழிற்சந்தைக்குள் பிரவேசிப்பதை

கட்டுப்படுத்துவதும், திறன்களை வளர்ப்பதன் மூலம் அதிக வருமானம் ஈட்டும் தொழில்களை தேடி நகர்வதை அதிகரிப்பதும் அமைச்சு எதிர்நோக்கும் மிகப்பெரிய சவாலாகும்.

அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பெருந்தோட்ட பிராந்தியங்களுக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை உருவாக்கப்படுமேயானால் தேசிய நடவடிக்கைத் திட்டத்தை அமுல்படுத்துவதும், புதிய கிராமங்களுக்கான வீடமைப்பும் துரிதப்படுத்தப்படும்.

வரவு செலவு திடடத்தின் மூலம் ஒதுக்கப்படும் நிதி, வெளிநாட்டு நிதியுதவிகள், அமைச்சை வலுப்படுத்துவதற்கான ஓர் அதிகாரசபை என்பன முறையாக அமையப்பெற்றால், தனிமைப்படுத்தப்பட்டு பின்தங்கிய நிலையில் இருக்கும் சமுதாயத்தை ஏனைய சமுதயாங்களுக்கு ஈடான தேசிய நீரோட்டத்துடன் ஒன்று சேர்ப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை இவ்வமைச்சினால் அமுல்படுத்தக்கூடியதாக இருக்கும்.

**பழனி திகாம்பரம், பா.உ.**
மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு



மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் செயலாளர்

**ரஞ்சினி நடராஜபிள்ளை அவர்களின் செய்தி**

2025இல் வளமான நாட்டை உருவாக்குவதற்காகவும் இலங்கையை சுபீட்சம் மிக்கதான நாடாக மாற்றுவதற்காக அரசாங்கத்தினால் 2025 ஐ நோக்கிய தூரநோக்குத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. இத்தூர நோக்குத்திட்டத்தின் மூலம் பெருந்தோட்ட சமுதாயத்தினரின் வாழ்க்கைத் தரம் நாட்டின் ஏனைய சமூகத்தினரின் வாழ்க்கைத் தரத்திற்கு ஒப்பானதாக மாற்றம் பெறவேண்டும். குறிப்பாக மலையக மக்களின் வறுமை நிலை, கல்விக்கான வாய்ப்பு, சுகாதாரம் போசாக்கு, வீடமைப்பு, பாதுகாப்பான குடிநீர் ஆகியவற்றின் வாழ்க்கைக் குறிகாட்டிகள் தேசிய நகர மட்ட சுட்டிகளுடன் ஒப்பிடும் போது மிகவும் தாழ்ந்த நிலையில் உள்ளமையை காணக்கூடியதாகவுள்ளது. இந்நிலையை மாற்றி பெருந்தோட்டப் பகுதிகளில் புத்தாயிரமாண்டின் அபிவிருத்தி இலக்குகளையும் (MDG) பேண்தகு அபிவிருத்தி இலக்குகளையும் (SDG) அடைவதற்கான நோக்கோடு இவ்வமைச்சானது மலையக மக்களின் இயல்பு வாழ்வு மற்றும் அவர்களின் சமுதாய அபிவிருத்தியில் மேம்படுத்தலை உறுதிப்படுத்தும் பொருட்டு, இவ்வமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட நிதியில் பல்வேறு வேலைத்திடடங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு தயாரிக்கப்பட்ட தேசிய நடவடிக்கைத் திட்டத்தில் முன்னுரிமையளிக்கப்பட்ட விடயங்களுக்கு எமது கவனம் செலுத்தப்பட்டு அவ்வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருவதுடன் இத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட சகல அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களையும் ஒருங்கிணைப்புச் செய்து தேசிய செயற்றிட்டத்தில் குறிப்பிடப்பட்ட இலக்கை நோக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

கடந்த பெப்ரவரி 09ம் திகதி மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களால் முதலாவதாக அமைக்கப்பட்ட ஊட்டுவள்ளி புதிய கிராமம் மக்களுக்கு கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் 71 பயனாளிகளுக்கு தூய காணி உரித்துடனான வீடுகள் கையளிக்கப்பட்டமை வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் குறிக்கப்பட வேண்டிய நிகழ்வாகவே நாம் கருதுகின்றோம். அதேபோன்று 2010ம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை அரசாங்க நிதியில் நிர்மாணிக்கப்பட்ட சகல வீடுகளுக்குமான காணி உறுதிப் பத்திரங்கள் வழங்க அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. லயன் அறைகளுக்கு பதிலாக வீட்டுத்திட்டங்கள் மாத்திரமல்ல தோட்டப்பகுதிகளில் பாதைகள், கல்வி வசதிகள், சுகாதாரம், விளையாட்டு வசதிகள், சமய வழிப்பாட்டுத் தலங்கள், கூட்டுறவு சங்கங்கள்

என்பவற்றை உள்ளக்கிய சிறந்த வாழ்விட அமைப்பினையும் அமைத்து வருகிறோம்.

2017 ஆம் ஆண்டில் மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சினால் செப்டெம்பர் மாதம் வரை நடைமுறைப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களும் இவ்வாண்டின் இறுதிக்குள் அமுல்படுத்தப்பட வேண்டிய திட்டங்களும் இச்செயலாற்றுகை அறிக்கை மூலம் சமர்ப்பிக்கப்படுகின்றது.

பெருந்தோட்ட மக்களின் அபிவிருத்தியை துரிதப்படுத்துவதன் மூலம் தேசிய அபிவிருத்தியில் தோட்ட சமுதாயம் பின்தங்கி இல்லாத ஒரு நிலையை உறுதி செய்யும் நோக்கில் செயற்றிட்டங்களை வகுத்து செயற்படும் எமது அமைச்சின் செயற்பாடுகளுக்கு உரிய ஆலாசனையையும் சிறந்த தலைமைத்துவத்தையும் வழங்கி வழிநடத்தும் மாண்புமிகு அமைச்சர் பழனி திகாம்பரம் அவர்களுக்கும், மாலைநாட்டு மக்களின் வாழ்வில் நல்லதொரு மாற்றத்தை ஏற்படுத்த கொள்கை ரீதியாக உடன்பாட்டுடன் செயற்படும் மேன்மைதங்கிய ஜனாதிபதி, கௌரவ பிரதம மந்திரி மற்றும் சகல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எமது அமைச்சின் நிகழ்ச்சித்திட்டங்களை வினைத்திறனுடன் அமுல்படுத்துகின்ற அமைச்சின் உத்தியோகத்தர்கள், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதிய உத்தியோகத்தர்கள், மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச நிர்வாகம் சார்ந்த உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

“மலையக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நாம் ஒன்றுபட்டு உழைப்போம்”

**ரஞ்சினி நடராஜபிள்ளை**
செயலாளர்







# 01

## அறிமுகம்

இரு நூற்றாண்டுகால வரலாற்றுக்கு உரிமை கூறும் இலங்கை பெருந்தோட்ட சமுதாயத்தினரின் ஆரம்பமமானது இந்நாடு பிரித்தானியாவின் காலனித்துவ ஆட்சிக்கு உட்பட்டிருந்த காலம்வரை நீண்டு செல்கின்றது. பிரித்தானியர்களினால் 1840 இல் மலையகத்தில் கோப்பிப் பயிர்செய்கைக்காக தொழிலாளர்களாக தென்னிந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்ட இவர்கள் கோப்பிப் பயிர்ச்செய்கை அழிவடைந்ததை அடுத்து ஏற்படுத்தப்பட்ட தேயிலை மற்றும் இறப்பர் பயிர்ச்செய்கைகளை மையமாகக் கொண்டு விசேடமான தனிமைப்பட்ட ஒரு இனப்பிரிவினராக வளர்ச்சியடைந்துள்ளனர்.

லயன் அறைகளைக் கொண்ட வரிசையாக அமைந்த வீடுகளை தமது இருப்பிடமாகக் கொண்டு மிகவும் வறிய தொழிலாளர்களின் வாழ்க்கை முறைக்கு உரிமை கூறும் இவர்களை மனித அபிவிருத்திச் சுட்டிகள் (நகர மற்றும் கிராமிய) உடன் ஒப்பிடும்போது ஏனைய இனப்பிரிவினர்களைவிட கணிசமான சமூக முரண்பாடுகளை எதிர்கொண்டிருப்பதை அவதானிக்க முடியும். தேசிய சமூக அபிவிருத்தி சுட்டிகளுடன் ஒப்பிடும் போது இம்மக்களின் சமூக அபிவிருத்தி சுட்டிகள் மிகவும் பின்னடைவையே காட்டுகின்றன.

பெருந்தோட்ட மக்கள் இலங்கையின் மொத்த சனத்தொகையில் 5% பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். பெருந்தோட்ட பிரதேசங்களில் 1.1 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் இத்துறையில் ஈடுபட்டிருக்கும் அதேவேளை ஒரு மில்லியானுக்கு அதிகமான மக்கள் ஓர் சிறிய காணித்துண்டொன்றிற்கு கூட உரிமையில்லாத நிலையில் இப்பிரதேசங்களிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

### பெருந்தோட்ட துறைசார்ந்த பிரதான புள்ளிவிபரங்கள் (சிறு தேயிலை தோட்டங்கள் தவிர்ந்த)

1. காணிகள் தொடர்பான விபரங்கள்
    - பெருந்தோட்ட கம்பனிகளின் எண்ணிக்கை - 24
    - தோட்டங்களின் எண்ணிக்கை - 453
    - மொத்த நிலப்பரப்பு 280,034 ஹெக்டெயார்
        - தேயிலை - 80,637 ஹெக்டெயார்
        - றப்பர் - 45,881 ஹெக்டெயார்
        - தென்னை - 9,482 ஹெக்டெயார்
        - பயிரிடப்படாத நிலப்பரப்பு - 117,275 ஹெக்டெயார்

மூலம் **Annual Health Return**, பெ.ம. அ. நி 2014

2. சனத்தொகை விபரங்கள்
    - சனத்தொகை - 999,166
    - குடும்பங்களின் எண்ணிக்கை - 256,545

| மாவட்டம் | நுவரெலியா | பதுளை | கண்டி | இரத்தினபுரி | காலி | கேகாலை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| சனத்தொகை | 446,458 | 184,862 | 128,918 | 113,037 | 64,336 | 59,561 | 997,166 |
| குடும்பங்களின் எண்ணிக்கை | 113,745 | 48,359 | 33,000 | 28,998 | 17,047 | 15,396 | 256,545 |

## 3“ வீடமைப்பு, குடிநீர் மற்றும் மலசலகூட வசதிகள்

| வீடமைப்பு | | |
|---|---|---|
| மேம்படுத்தப்பட்ட வீடுகள் | 35,027 | 13.6 % |
| இரட்டை வீடுகள் | 28,062 | |
| ஒற்றை லைன் வீடுகள் | 73,539 | |
| இரட்டை லைன் வீடுகள் | 69,613 | |
| தற்காலிக குடியிருப்புகள் | 13,814 | |
| மாடி லைன் வீடுகள் | 1,270 | |
| தேவைப்படும் வீடுகளின் எண்ணிக்கை | 221,518 | 86.4 % |

| மலசலகூட வசதிகள் - தற்போதைய நிலை | | |
|---|---|---|
| குடும்பங்களின் எண்ணிக்கை | 256,454 | 100% |
| வசதிகளைப் பெறும் குடும்பங்கள் | 138,257 | 53.9% |
| மலசலகூடங்கள் தேவைப்படும் குடும்பங்கள் | 118,288 | 46.1% |
| **குடிநீர் வசதிகள் - தற்போதைய நிலை** | | |
| குடும்பங்களின் எண்ணிக்கை | 256,545 | 100% |
| வசதிகளைப் பெறும் குடும்பங்கள் | 142,765 | 55.6% |
| குடிநீர் வசதிகள் தேவைப்படும் குடும்பங்கள் | 113,780 | 44.4% |

## 4. சுகாதாரம் மற்றும் போசாக்கு

கிராமிய, நகர்ப்புற மற்றும் தேசிய மட்டங்களுடன் ஒப்பிடும் போது 5 வயதுக்கு குறைந்த தோட்ட சிறுவர்களின் நிலைமை

சுகாதார சனத்தொகை மதிப்பீட்டு அறிக்கை - 2016/2017

| சுகாதார சனத்தொகை மதிப்பீடு | | | | |
|---|---|---|---|---|
| சுட்டிகள் | தோட்டப்புறம் % | கிராமிய % | நகர்ப்புறம் % | தேசிய மட்டம் % |
| 5 வயதிற்கு குறைவான பிள்ளைகள் | | | | |
| குள்ளமான | 31.7 | 17.0 | 14.7 | 17.3 |
| நிறை குறைந்த | 29.7 | 20.8 | 16.4 | 20.5 |
| பலவீனமான | 13.4 | 15.6 | 12.9 | 15.1 |

மூலம் பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியம் - 2016



# 02

## அமைச்சை தாபித்தல்

### பின்னணி

1948 டிசெம்பர் மாதம் 10 திகதி வெளியிடப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தொடர்பான விசேட வெளியீட்டின் 25 ஆம் பிரிவிற்கும், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் 17,23,24 ஆம் பிரிவுகளுக்கும், பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் 11 (1) பிரிவிற்கும் அமைவாக உணவு, உடை, உறையுள் மற்றும் சுகாதார பாதுகாப்பு, தேவையான சமூக பாதுகாப்பும் கொண்டு தன்னுடையதும் தனது குடும்பத்தினதும் சுகாதாரத்திற்கும் நலனுக்கும் தேவையான வாழ்க்கை முறையை அனுபவிப்பதற்கும், தன்னால் கட்டுப்படுத்த முடியாத இடர்களின் போது பாதுகாப்பைப் பெறுவதற்கும், முழுமையான ஓர் மனிதனின் உருவாக்கத்திற்கான தனிமையையும், தனிமையை அனுபவிப்பதற்கான உரிமையும் சகல மனிதனுக்கும் உரித்தாகவுள்ளது.

இலங்கையும் தனது அரசியலமைப்புச் சட்டத்தின் 10,11,13,14 ஆம் சரத்துக்களில் இவ்வுரிமைகளை உறுதிப்படுத்தும் வகையில் சகல மக்கள் கூட்டத்திற்கும் இவ்வனைத்து பிரதான சேவைகளையும் வசதிகளையும் அனுபவிக்கும் உரிமையையும் பெற்றுக்கொடுக்கும் பாரிய பொறுப்பை பல தசாப்தங்களாக மேற்கொண்டுவருகின்றது.

தென்னிந்தியாவில் இருந்து அழைத்துவரப்பட்டு இலங்கையின் மத்திய, ஊவா, சப்பிரகமுவ மாகாணங்களில் குடியமர்த்தப்பட்டு சமூக, பொருளாதா மற்றும் கலாசார ரீதியில் தனிமைப்படுத்தப்பட்ட பெருந்தோட்ட சமுதாயம் பிரித்தானிய காலனித்துவ ஆட்சிகாலத்தில் இருந்தே பெருந்தோட்ட முகாமைத்துவத்தை தங்கி வாழ்ந்ததால் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட அடிப்படை சேவைகளை அரிதாகவே அனுபவித்து வந்தது.

இதன் விளைவாக இருநூற்றாண்டுகளாக இலங்கையின் தேசிய வருமானதிற்காக பெரும் பங்காற்றிய மக்களுக்கு இவ்வரப்பிரசாதங்கள் கிடைப்பதற்கு தாமதமாகியது. அரச மற்றும் தனியார் துறையில் காணப்படும் சட்டத்திட்டங்களின் சில பொருந்தா தன்மைகள் காரணமாக 1 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தனியார் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் தமது வாழ்க்கையை தொடர்கின்றனர். இவ்வாறானதொரு மக்கள் சமுதயாத்திகு உரிய சேவைகளை வழங்குவதில் காணப்படும் சிக்கல்களை நிவர்த்தி செய்து அச் சமுதாயத்தின் சமூக அபிவிருத்தியை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துக் கொள்வதற்காக சரியானதொரு பொறிமுறையை உருவாக்குவதற்கான தேவை காணப்பட்டது.

### அமைச்சை தாபித்தல்

அதற்கமைய பெருந்தோட்ட சமுதாயத்தினர் இதுவரை காலமும் எதிர்நோக்கிய சமூக முரண்பாடுகளை ஒழித்து ஏனைய இனங்களுக்கு சமமான சமூக அந்தஸ்து, கௌரவம்,மற்றும் சுயமரியாதையைக் கொண்ட கிராமிய சமுதாயமாக வளர்ச்சியுறச் செய்யும் நோக்கத்துடன் புதிய அணுகுமுறையின் கீழ் தற்போதைய புதிய அரசாங்கமானது, ஆட்சிக்கு வந்ததை அடுத்து 2015.09.25 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1933/13ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரிகையின் மூலம் மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு தாபிக்கப்பட்டது.

## பிரதான கடமைகள்

**01** அரச மற்றும் தனியார் பெருந்தோட்ட கம்பனிகளல் தொழில்புரியும் காணி உரிமை இல்லாத லயன் வீடுகளில் வசிக்கும் பெருந் தோட்ட மக்களுக்கு வீடுகளையும் உட்கட்டமைப்பு வசதிகளையும் வழங்குவதறகாக புதிய கிராமங்கள் / நகராக்கல் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

**02** பெருந்தோட்ட சமுதாயத்தை வலுவூட்டுவதற்காக வாழ்வாதார அபிவிருத்தி கருத்திட்டங்களை செயற்படுத்துதல்

**03** பெருந்தோட்ட சமுதாயத்தை சமூக, பொருளாதார மற்றும் கலாசார ரீதியாக மேன்மையடையச் செய்வதற்கான அடிப்படை வசதிகள் உள்ளடங்கலாக ஏனைய அனைத்து வசதிகளையும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

**04** கிராமிய மற்றும் பெருந்தோட்ட துறையில் உட்கட்டமைப்பு வசதிகளை அபவிருத்தி செய்தல்



## 2.4. கடமைகளை நிறைவேற்றுவதற்காக அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள்

**பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம்**


**பிரஜாசக்தி கண்காணிப்பு பிரிவு**

1. பூல்பேங்க் தொழிற்பயிற்சி நிலையம் - ஹட்டன்
2. கலாசார நிலையம் - இறம்பொடை
3. விளையாட்டுத் தொகுதி - நோர்வூட்
4. பிரஜாசக்தி நிலையங்கள்

# 03 அமைச்சின் நிறுவன ஒழுங்கமைப்பும், தற்போதைய பதவியணியினரும்

## 3.1. நிறுவன அமைப்பு வரைபடம்

மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு
நிறுவன ஒழுங்கமைப்பு (2017.09.30)



## அட்டவணை 2: அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் தற்போதைய பதவியணியினா் (2017.09.30 திகதிக்கு)

| தொ. இல. | பதவி | சேவை | தரம் | அங்கிகரி-க்கப்பட்ட பதவியணி | | சேவை யில் உள்ள பதவியணி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | நிரந்தர | தற்காலிக | நிரந்தர | தற்காலிக |
| 01 | செயலாளர் | | | 1 | - | 1 | - |
| 02 | மேலதிக செயலாளர் | இ.நி.சே. | விசேட | 2 | - | 2 | - |
| 03 | சிரேஸ்ட உதவி செயலாளர் | இ.நி.சே. | வகுப்பு I | 1 | - | 1 | - |
| 04 | பணிப்பாளர் | இ.நி.சே. | வகுப்பு I | 1 | - | 1 | - |
| 05 | பணிப்பாளர் | இ.தி.சே. | வகுப்பு I | 1 | | 1 | - |
| 06 | பணிப்பாளர்(பொறியில்) | இ.பொ.சே | வகுப்பு I | 1 | - | - | - |
| 07 | பிரதான கணக்காளர் | இ.க.சே | வகுப்பு I | 1 | - | 1 | - |
| 08 | பிரதான உள்ளக கணக்க-ாய்வாளர் | இ.க.சே | வகுப்பு I | 1 | - | 1 | - |
| 09 | உதவி செயலாளர் | இ.நி.சே | வகுப்பு III/II | 1 | - | - | - |
| 10 | உதவி பணிப்பாளர் | இ.தி.சே | வகுப்பு III/II | 2 | - | 1 | - |
| 11 | உதவி பணிப்பாளர் | இ.பொ.சே | வகுப்பு III/II | 2 | - | 2 | - |
| 12 | உதவி பணிப்பாளர் | இ.க.சே | வகுப்பு III/II | 1 | - | 1 | - |
| 13 | கணக்காளர் | இ.நி.சே | வகுப்பு III/II | 1 | - | 1 | - |
| 14 | நிர்வாக உத்தியோகத்தர் | அ.மு.உ.சே | Supra | 1 | - | 1 | - |
| 15 | மொழிப்பொயர்ப்பாளர் | மொழிபெயர்ப்பாளர் சேவை | வகுப்பு II/I | 2 | - | - | - |
| 16 | புள்ளி விபரவியல் உத்தியே-ாகத்தர் | | | 1 | - | - | - |
| 17 | தொழில்நுட்ப உத்தியோகத்-தர் | இ.த.தொ.தொ.சே | வகுப்பு III/ II/I | 3 | - | - | 2 |
| 18 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | | வகுப்பு III/ II/I | 14 | - | 14 | - |
| 19 | தகவல் தொழில்நுட்ப உத்தி-யோகத்தர் | | 3- III/II/I | 1 | - | - | - |
| 20 | செயலாளரின் இணைப்புச் செயலாளர் | அ.அ.சே | | - | 1 | - | 1 |
| 21 | ஆரச முகாமைத்துவ உத்தி-யோகத்தர் | அ.மு.உ.சே | வகுப்பு III/ II/I | 20 | - | 12 | 1 |
| 22 | பெருந்தோட்ட சமுதாய தொடர்பாடல் வசதியளிப்பாளர் | அமைச்சுசார் | | 255 | - | 183 | - |
| 23 | புகைப்பட கலைஞர் | தற்காலிகம் | | 0 | 1 | - | 1 |
| 24 | வீடியோ கெமரா கலைஞர் | தற்காலிகம் | | 0 | 1 | - | 1 |
| 25 | புகைப்பட உதவியாளர் | தற்காலிகம் | | 0 | 1 | - | 1 |
| 26 | சாரதிகள் | இணைந்த சாரதி சேவை | III/II/I/விசேட | 12 | - | 12 | - |
| 27 | காரியாலய உதவியாளர்கள் | காரியாலய உதவியாளர் சேவை | III/II/I/ விசேட | 12 | 1 | 7 | - |
| | | | | 337 | 5 | 242 | 7 |

## செயலாளரின் பிரிவு

அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரான செயலாளரின் கீழ் செயலாளரின் பிரிவு இயங்குவதுடன் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ள விசேட செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கும், செயலாளருக்கும் அமைச்சின் ஏனைய பிரிவுகளுக்கும் இடையில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதல், கூட்டங்களை ஏற்பாடு செய்தல், ஏனைய அமைச்சுக்களுடனும் வெளிநாட்டு நிறுவனங்களுடனும் தொடர்பை ஏற்படுத்துதல் போன்ற செயற்பாடுகள் இப்பிரிவினால் பிரதானமாக நிறைவேற்றப்படுகின்றது.

## நிர்வாகப் பிரிவு:

பெருந்தோட்ட மக்கள் சமுதாயத்திற்காக அமைச்சினால் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டங்களை குறித்த காலப்பகுதியினுள் நிறைவு செய்வதற்கு தேவையான மனித வளத்தைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக அமைச்சினை ஒழுங்கமைத்தல், புதிய பதவிகளை உருவாக்குதல், புதிய உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ளல், பயிற்சிகளை வழங்குதல் போன்ற செயற்பாடுகளின் ஊடாக அமைச்சின் மனிதவளத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் கண்காணித்தல் போன்ற நடவடிக்கைகள் நிர்வாக பிரிவின் பிரதான பொறுப்புகளாகும். இவற்றிற்கு மேலதிகமாக:

- அமைச்சின் நிர்வாகம்
- அமைச்சிற்கு வெளியில் பணியாற்றும் உத்தியோகத்தர்களின் இடமாற்றம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் ஏனைய காரியாலய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- அமைச்சின் பதவியணியினர் தொடர்பான விபரங்களை இற்றைப்படுத்துதல் மற்றும் தேவையான நிறுவனங்களுக்கு வழங்குதல்
- அமைச்சின் வாகனங்கள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதல், ஏனைய அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களுடன் இணைப்பை ஏற்படுத்துதல்
- தாபனக் கோவை, நிதி கோவை, சுற்றறிக்கைகள் மற்றும் வேறு சட்டத்திட்டங்களுக்கு அமைய காரியாலய உத்தியோகத்தர்களை வழிநடத்துதல் போன்ற செயற்பாடுகள் நிர்வாகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

.

## 2017 செப்டெம்பர் மாதம் வரை மனிதவள அபிவிருத்திக்காக அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள பயிற்சி நெறிகள்

### உள்நாட்டு பயிற்சிநெறிகள்

| பயிற்சிப் பாடநெறி | | நிறுவனம் | பயிற்றப்பட்டவர்கள் |
|---|---|---|---|
| 01 | CIGAS | மிலோதா | 1 |
| 02 | ஆங்கில டிப்ளோமா | SLIDA | 1 |
| 03 | சம்பளப் பட்டியல் | மிலோதா | 1 |
| 04 | தேசிய ஆங்கில டிப்ளோமா | இலங்கை மன்றம் | 1 |
| 05 | தொழில்நுட்பம் சாரா உத்தியோகத்தர்களுக்கான தொழில்நுட்ப பயிற்சி | மிலோதா | 4 |
| 06 | தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார முகாமைத்துவம் | உற்பத்திதிறன் செயலகம் | 1 |

| 07 | வாகன இயந்திர பராமரிப்பு | National Institute of Labour Studies | 1 |
|---|---|---|---|
| 08 | தொழில்நுட்ப ரீதியில் சிக்கனமான மற்றும் பாதுகாப்பான வாகன ஓட்டுதல் | Construction and Equipment Training Centre | 6 |
| 09 | பெயர்வழி கோப்பொன்றை முறையாக பேணுதல் | National Institute of Labour Studies | 3 |

## வெளிநாட்டு பயிற்சி நெறிகள்

| நாடு | | பயிற்சி நெறி | நிறுவனம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | சீனா | அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் வாழ்வாதாரம் மற்றும் சமூக அபிவிருத்தி 2017 | வெளிநாட்டு வள திணைக்களம் | 2 |
| 02 | சீனா | 2017 Seminar on Urbanization Construction & Planning for the Belt & Road Countries | வெளிநாட்டு வள திணைக்களம் | 1 |
| 03 | இந்தோனேசியா | PIM International Programme in Management at Universitas Gadjah Mada | முதுகலை முகாமைத்துவ நிறுவனம் | 1 |
| 04 | மலேசியா | திறன் அபிவிருத்தி பயிற்சிநெறி | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் | 1 |

## அபிவிருத்தி பிரிவு:

பெருந்தோட்ட துறை மக்களின் நலன்புரி விடயங்கள், அவர்களின் வாழ்விடம், வாழ்க்கைத் தரம் மற்றும் சமூக பொருளாதார வசதிகளை மேம்படுத்தவதற்ாக அமைச்சு 5 பிரிவுகளின் கீழ் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது. அமைச்சு, அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்கள், மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகளின் ஊடாக இச்செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றது. இச்செயற்றிட்டங்களை கண்காணித்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் தொடர்பான அனைத்துப் பொறுப்புகளையும் உள்ளடக்கி அரசாங்கத்தின் திரட்டு நிதி மற்றும் இந்திய அரசாங்கத்தின் நன்கொடையை பயன்படுத்தி அமைச்சின் நோக்கங்களையும் இலக்குகளையும் அடைவதற்கான பிரதான செயற்பாடுகள் அபிவிருத்தி பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. இச்செயற்பாடுகளை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கு பொறியியல் பிரிவு பெரும் பங்களிப்பை வழங்கிவருதுடன் அபிவிருத்தி பிரிவினால் பின்வரும் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

- அமைச்சரவை விஞ்ஞாபனங்கள், முன்னேற்ற அறிக்கைகள், செயற்றிட்ட முன்மொழிவுகளை தயாரித்தல்
- பொறியியல் மதிப்பீடுகள், செயற்றிட்ட வழிகாட்டிகளை தயாரித்த்ல்
- கள மேற்பார்வை, கண்காணிப்பு மற்றும் களவிஜயங்களை மேற்கொள்ளுதல்
- பிரஜாசக்தி கண்காணிப்பு பிரிவு, பிரஜாசக்தி நிலையங்கள், பூல்பேங்க் தொழிற்பயிற்சி நிலையம், இறம்பொடை கலாசார நிலையம் மற்றும் நோர்வூட் விளையாட்டுத் தொகுதி போன்றவற்றை நிர்வகித்தல்
- பூல்பேங்க் தொழிற்பயிற்சி நிலையத்தை நவீனமயப்படுத்தல்

அபிவிருத்திப் பிரிவின் கண்காணிப்பின் கீழ் அமுல்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் அவற்றுக்கான நிதி ஒதுக்கீடு

| | செலவு தலைப்பு இலக்கம் | நிகழ்ச்சிகள் | நிதி ஒதுக்கீடு (ரூ.மி) | |
|---|---|---|---|---|
| | | | உள்நாடு | இந்திய நன்கொடை |

| | | | | |
|---|---|---|---|---|
| 01 | 1- 20506 | வாழ்வாதார அபிவிருத்தி | 100 | - |
| 02 | 2- 20506 | பின்தங்கிய பிரதேசங்களில் சமூக பொருளாதார அபிவிருத்தி | 500 | - |
| 03 | 3- 20506 | தோட்ட வீடமைப்பு அபிவிருத்தி | 2,000 | - |
| 04 | 4- 20506 | இந்திய அரசாங்கத்தின் நன்கொடையுடன் ஹட்டன் பூல்பேங்க் தொழிற்பயிற்சி நிலையத்தை அபிவிருத்தி செய்தல் | 12 | 120 |
| 05 | 5- 20506 | இந்திய நன்கொடையுடனான வீடமைப்புத் திட்டம் | 154 | 1,134 |
| | | | 2,766 | 1,254 |

## திட்டமிடல் பிரிவு

அமைச்சின் குறிக்கோள்களை அடைவதற்கு ஏதுவான பின்வரும் செயற்பாடுகள் திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

- அபிவிருத்தி கொள்கைகள் மற்றும் திட்டங்களை வகுத்தல் அதற்கமைய அமைச்சின் வருடாந்த நிகழ்ச்சித் திட்டத்தை தயாரித்தல்,
- அமைச்சின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான செயற்றிட்ட மதிப்பீடுகளை தயாரித்தல்
- தேசிய நடவடிக்கைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதல்
- புதிய அபிவிருத்தி செயற்றிட்டங்களை இனம்காணல், செயற்றிட்ட முன்மொழிவுகளை தயாரித்தல் மற்றும் அமைச்சரவை விஞ்ஞாபனங்களை தயாரித்தல்.
- செயற்றிட்டங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் அமைச்சினூடான செயற்றிட்டங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் முன்னேற்ற மதிப்பாய்விற்காக முன்னேற்ற மதிப்பாய்வு அறிக்கை தயார் செய்தல், அவற்றை அதனுடன் தொடர்புபட்ட நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்தல்.
- அமைச்சின் இணையதளத்தை வடிவமைத்தல்
- அமைச்சின் முன்னேற்ற அறிக்கையை தயாரித்து பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்
- இதுவரை பெரும் குறைபாடாக காணப்பட்ட பெருந்தோட்ட துறைசார்ந்த விபரங்களை பெற்றுக்கொள்வதற்கான தரவுத் தளம் அமைத்தல், தரவுகளை சேகரித்தல் மற்றும் இற்றைப்படுத்துதல்.

## கணக்குப் பிரிவு:

அமைச்சு மற்றும் அதன் கீழ் இருக்கும் நிறுவனங்களுக்கு தேவையான பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்து வழங்குதல், சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகளை வழங்குதல், அபிவிருத்தி செயற்பாடுகள் சார்ந்த கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல், பழுதுபார்த்தல், அரசாங்க நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் அனைத்து கொடுப்பனவுகளுக்கும் பொறுப்பாக இருப்பது கணக்குப் பிரிவாகும்.

## உள்ளக கணக்காய்வுப் பிரிவு:

அமைச்சின் நிதி நடவடிக்கைகள் தொடர்பாக காணப்படும் உள்ளக கட்டமைப்பை கண்காணிப்பதுடன் பிழைகள், குறைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்காக காணப்படுகின்ற உள்ளக பரிசீலனைகள் தொடர்பான முறைகள் பற்றி தொடர்ச்சியாக கண்காணித்தல், வருடாந்த நிதி ஒதுக்கீட்டின் மூலம் நடத்தப்படும் அபிவிருத்தி செயற்றிட்டங்கள் தொடர்பாக அமைச்சின் நிதி நடவடிக்கைகள் தொடர்பாக நடைமுறையில் உள்ள உள்ளக நிர்வாக முறைமை தொடர்பாக கணிப்பீடுகளை மேற்கொள்வதன் மூலம் தவறுகள் மற்றும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக உரிய ஆலோசனைகளை வழங்குதல். வருடாந்த நிதி ஒதுக்கீட்டின் மூலம் நடைபெறும் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் செயற்றிட்டங்களையும் கண்காணித்தல், கணக்காய்வு முகாமைத்துவ குழு கூட்டங்களை நடத்துதல் போன்ற செயற்பாடுகள் கணக்காய்வு பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

# 04

# அமைச்சின் அபிவிருத்தி அணுகுமுறைகளும் முன்னுரிமைகளும்

## 4.1 அபிவிருத்தி அணுகுமுறைகள்

பெருந்தோட்ட மக்கள் இதுவரை முகம்கொடுத்து வந்த சமூக முரண்பாடுகளை நீக்கி அவர்களை கௌரவமான கிராமிய சமூகமாக பரிணமிக்கச் செய்யும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு நாட்டின் மத்திய, ஊவா, சப்ரகமுவ, மேற்கு, வடமேல் மற்றும் தென் மாகாணங்களின் சில பகுதிகளை மையமாகக் கொண்டு தேயிலை மற்றும் இறப்பர் தோட்டப் பிரதேசங்களில் வாழ்ந்து வருகின்ற சுமார் 250,000 குடும்பங்களைச் சேர்ந்த (ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட சனத்தொகையை கொண்ட) தோட்டப்புற மக்களது சமூக, பொருளாதார அபிவிருத்தியை முறையான திசைமுகப்படுத்தலின் ஊடாகவும் சிறந்த மேற்பார்வையுடனும் மேற்கொள்ளும் பொருட்டு தயார் செய்யப்பட்டுள்ள ஐந்து ஆண்டு தேசிய நடவடிக்கைத் திட்டம் (2016-2020) இவ் அமைச்சினால் அமுல்படுத்தப்படுகின்றது.

இதனை அடிப்படையாகக் கொண்டு, இத்திட்டத்தில் முன்னுரிமையளிக்கப்பட்டுள்ள வீடுகள், குடிநீர் மற்றும் மலசலகூட வசதிகள், சுகாதாரம் மற்றம் போசாக்கு, கல்வி மற்றும் ஆரம்ப பராய சிறுவர் அபிவிருத்தி, தொழிற் பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி. சமூக வலுவூட்டல் போன்ற துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய பிரதான அமைச்சுக்கள்,மாகாண அமைச்சுக்கள் ஆகிய அனைத்து நிறுவனங்களினதும் பூரண ஒத்துழைப்பைப் பெற்றுக்கொண்டு பெருந்தோட்ட சமுதாயத்தின் சமூக பொருளாதார அபிவிருத்தியை வலுவூட்டுவதற்காக, இவ்வமைச்சுக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளை எந்தவிதமான தடைகளும் இன்றி முன்னெடுத்துச் செல்வதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது.



# அமைச்சின் முன்னுரிமைகள்

## பின்தங்கிய பிரதேசங்களில் சமூக பொருளாதார அபிவிருத்தி

- லயன் வீடுகளின் கூரைகளை மீளப்பொருத்துதல்
- குடிநீர் மற்றும் மலசலகூட வசதிகளை வழங்குதல்
- சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் அபிவிருத்தி
- ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, விசேட செயற்றிட்டங்கள்

## மலைநாட்டு புதிய கிராமங்களுக்கான வீடமைப்பு

- பசும் பொன், இந்திய நன்கொடை வீடமைப்பு
- பயனாளிகள் கட்டும் முறை

## வாழ்வாதார அபிவிருத்தி

- திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி
- சமூக வலுவூட்டல்
- சுகாதாரம் மற்றும் போசாக்கு

## 4.2. அபிவிருத்தி கருத்திட்டங்களை அமுல்படுத்தும் பொறிமுறையும் நிறுவனக் கட்டமைப்பும்


### அமுல்படுத்தும் பொறிமுறை

அமைச்சினால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி செயற்றிட்டங்களை அமுல்படுத்தும் முக்கிய செயற்பணி அமைச்சின் விடயப்பரப்புக்குள் அடங்கும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் ஊடாகவும் பிரஜாசக்தி கண்காணிப்பு பிரிவினூடாகவும், மாவட்ட/ பிரதேச செயலகங்களின் ஊடாகவும் பிரதேச சபைகளின் ஊடாகவும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

### அபிவிருத்திக் கருத்திட்டங்களை அமுல்படுத்தும் நிறுவனக் கட்டமைப்பு

| முன்னுரிமைகள் | அமுல்படுத்தும் நிறுவனம் |
|---|---|
| (1) தோட்டத்துறை வீடமைப்பு அபிவிருத்த திட்டம்<br>**(i)** பசும் பொன் வீடமைப்புத்திட்டம்<br>**(ii)** இந்திய உதவியுடனான வீடமைப்புத்திட்டம்<br>**(iii)** உரிமையாளர் கட்டும் வீடமைப்புத் திட்டம் | - பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் (PHDT)<br>- UNHABITAT<br>- சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை,<br>- தோட்ட தொழிலாளர் வீடமைப்பு கூட்டுறவு சங்கம் |
| 2) பின்தங்கிய பிரதேசங்களில் சமூக, பொருளாதார அபிவிருத்தி.<br>(I) லயன் அறைகளுக்கு கூரைகளை பொருத்துதல்<br>(II) குடிநீர் வசதிகளை பெற்றுக்கொடுத்தல்<br>(III) மலசலகூட வசதிகளை வழங்குதல்<br>(IV) சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை அபிவிருத்தி செய்தல்<br>(V) ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் (அடைவுப் பாதைகள்/ மின்சாரம்)<br>(VI) விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் (சமயம்/ கலாசாரம்) | பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம்<br><br>பிரதேச செயலகங்கள் மற்றும் பிரதேச சபைகள் |
| (3) வாழ்வாதார அபிவிருத்தி<br>(I) திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி<br>(II) சமுதாயத்தை வலுவூட்டல்<br>(III) சுகாதாரமும் போஷாக்கும் | பூல்பேங்க் தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் பிரஜாசக்தி நிகழ்ச்சித்திட்டம் ஊடாக<br><br>-பிரஜா சக்தி கருத்திட்டம் மற்றும் சுழல் நிதியத்தின் மூலம்<br>-பிரதேச செயலகம் / மாவட்ட செயலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள பெருந்தோட்ட சமுதாய தொடர்பாடல் வசதியளிப்பு அலுவலர்கள் ஊடாக |

## நிறுவனக் கட்டமைப்பு



# 05

## 2017 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடும் நிதி முன்னேற்றமும்

| பிரிவு / நிகழ்ச்சித்திட்டம் / விடயம் | மீண்டுவரும் செலவுகள் | மூலதன செலவுகள் ரூ."000" | மொத்தம் ரூ."000" |
|---|---|---|---|
| அமைச்சரின் காரியாலயம் | 24,350 | 2,500 | 26,850 |
| அமைச்சின் நிர்வாகம் மற்றும் தாபனச் செயற்பாடுகள் | 311,026 | 10,010 | 321,036 |
| கிராமிய சமுதாய அபிவிருத்தி | | | |
| 1. கிராமிய பிரதேசங்களில் வாழ்வாதார மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தல் | | 100,000 | 100,000 |
| 2. பின்தங்கிய பிரதேசங்களுக்கான சமூக பொருளாதார அபிவிருத்தி | | 500,000 | 500,000 |
| 3. பெருந்தோட்ட வீடமைப்பு அபிவிருத்தி (மலைநாட்டு புதிய கிராமங்களுக்கான வீடுகள்) (பாதீட்டு முன்மொழிவுகள் உள்ளடங்கும்) | | 1,000,000<br>1,000,000 | 1,000,000<br>1,000,000 |
| 4. ஹட்டன் பூல்பேங்க் தொழிற்பயிற்சி நிலையத்தை அபிவிருத்தி செய்தல்<br>(13)<br>(17) | | 120,000<br>12,000 | 120,000<br>12,000 |
| 5. இந்திய நன்கொடை வீடமைப்புத்திட்டம்<br>(13)<br>(17) | | 1,134,000<br>154,000 | 1,134,000<br>154,000 |
| **மொத்த நிதி ஒதுக்கீடு** | 3,35,376 | 40,32,510 | 43,67,886 |

## 2017 ஜனவரி - செப்டெம்பர் 30 வரையிலான அமைச்சின் செலவின பொழிப்பு

| பிரிவு / நிகழ்ச்சித்திட்டம் / விடயம் | 2017 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ."000" | 2017.09.30 திகதி வரை செலவு ரூ."000" | செலவு விகிதம் % |
|---|---|---|---|
| மீண்டுவரும் செலவுகள் | 335,376 | 223,091 | 67 |
| சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் | 235,350 | 155,320 | 66 |
| கௌரவ அமைச்சரின் காரியாலயம் | 13,050 | 10,165 | 78 |
| அமைச்சின் நிர்வாகம் | 222,300 | 145,155 | 65 |
| | | | |
| பொதுவான நிர்வாகம் | 100,026 | 67,771 | 68 |
| கௌரவ அமைச்சரின் காரியாலயம் | 11,300 | 6,820 | 60 |
| அமைச்சின் நிர்வாகம் | 88,726 | 60,952 | 69 |
| | | | |
| மூலதன செலவுகள் | 4,032,510 | 781,882 | 19 |
| பொதுவான நிர்வாகம் | 12,510 | 6,202 | 50 |
| கௌரவ அமைச்சரின் காரியாலயம் | 2,500 | 1,744 | 70 |
| அமைச்சின் நிர்வாகம் | 10,010 | 4,458 | 45 |
| | | | |
| அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டங்கள் | **4,020,000** (13 - 1,254,000, **17 - 2,766,000) | 839.192 | **30.34 |
| அ. வாழ்வாதாரம் மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தல் | 100,000 | 26.280 | 26.28 |
| ஆ. பின்தங்கிய பிரதேசங்களில் சமூக பொருளாதார அபிவிருத்தி | 500,000 | 106.570 | 21.34 |
| இ. மலைநாட்டு புதிய கிராமங்களுக்கான வீடுகள் | 2,000,000 | 699.90 | 35 |
| ஈ. பூல்பேங்க் தொழிற்பயிற்சி நிலையத்தை தரம் உயர்த்துதல் | *13 - **120,000** | | - |
| | 17 -12,000 | | |
| உ. இந்திய நன்கொடை வீடமைப்புத்திட்டம் | *13 - 1,134,000 | | 1 |
| | 17 - 154,000 | 6,442 | 4.18 |




4

# 06

## அமைச்சின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களும் முன்னேற்றங்களும்

### 6.1. மலைநாட்டு புதிய கிராமங்களுக்கான வீடுகள்

இருப்பிடங்கள் தொடர்பான சுட்டிகளை கவனத்தில் கொள்ளும்போது மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள இனப்பிரிவினராக பெருந்தோட்ட சமுதாயத்தினரை கவனத்தில் கொள்ளலாம். பெருந்தோட்ட சமுதாயத்தினர் வாழ்ந்துவரும் வீடுகளில் 58% ற்கும் மேற்பட்டவை வரிசையாக அமைந்த "லயன் அறைகளாக" காணப்படுகின்றன. (தேசிய ரீதியாக நோக்கும்போது இவ்வாறான வீடுகளின் விகிதம் 3.8% ஆகும்). இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்பு பிரித்தானிய தோட்ட முகாமைத்துவத்தினரால் தோட்டத் தொழிலாளர்களுக்காக அமைக்கப்பட்ட மிகப் பழமையான இந்த லயன் வீடுகள் தற்போது மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன. சூரிய ஒளி, காற்று குறைவாக காணப்படுதல், அதிக நெரிசல், தனிப்பட்ட சுதந்திரம் இன்மை, பல குடும்பங்கள் ஒரே அறையில் வாழ வேண்டிய நிலையினால் பல்வேறு துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக வேண்டிய நிலை, பாதுகாப்பற்ற தன்மை, சமூக அங்கீகாரம் இன்மை, சுகாதாரம் மற்றும் சிறுவர்களின் கல்விக்கு பொருத்தமில்லாத சூழல் காணப்படுதல் போன்ற பலவேறு சமூக பிரச்சினைகள் உருவாகியுள்ளன.

பெருந்தோட்டத் துறையில் இவ்வாறான 3 விதமான வீடுகள் அரசாங்கத்தினால் இணங் காணப்பட்டுள்ளது.

### 1. ஒற்றை வரிசை லயன் அறைகள்-தனி இருப்பிட தொகுதி ( Single Line Houses)

முன் வரண்டாவுடன் கூடிய அறையை உள்ளடக்கியது (5x5 சதுர அடி). லயன் அறைகள் 120 சதுர அடி பரப்பளவை கொண்டவை ( சில அறைகள் இதையும் விட சிறியவை) பெருந்தோட்டத் துறையில் இது போன்ற 11,599 ஒற்றை வரிசை லயன்கள் இருப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இதில் 73,539 வீடுகள் உள்ளடங்கும். 81,900 இற்கும் அதிகமான குடும்பங்கள் இவ்வீடுகளில் வசிக்கின்றனர்.

### 2. இரட்டை வரிசை லயன் அறைகள் -இரட்டை இருப்பிட தொகுதி (Double Line Houses)

முன் வராந்தாவுடன் கூடிய முன்பக்க, பின்பக்க குடியிருப்புகள் ஒவ்வொரு லயன் அறை குடியிருப்பும் 10-12 அறைகளை கொண்டிருக்கும். பொதுவாக ஒரு லயன் அறை 10 ஒ 12 சதுரஅடி பரப்பளவை கொண்டிருக்கும். தற்போது இவ்வாறான லயன்கள் 5,468 காணப்படும் அதேவேளை அதில் 69,613 வீடுகளும் 69,613 குடும்பங்களும் உள்ளடங்குகின்றன.


### 3. தற்காலிக குடியிருப்புகள்

பெருந்தோட்டத் துறையில் படிப்படியாக சனத்தொகை அதிகரிப்பதனால் அங்கு காணப்படும் லயன் அறைகள் அவர்கள் வாழ்வதற்கு போதாத காரணத்தினால் அவற்றுடன் இணைந்ததாக காணப்படும் காணிகளில் தற்காலிக வீடுகளை அமைத்துள்ளனர். கூரைத்தகடுகள், பொலித்தீனைப் பயன்படுத்தி அமைக்கப்படும் இத்தற்காலிக வீடுகள் மிகவும் குறைந்த வசதிகளுடன் காணப்படும். இவ்வாறான 13,814 தற்காலிக வீடுகளில் 14,500 இற்கும் அதிகமான குடும்பங்கள் வாழ்கின்றன.

(மூலம்: பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம்- 2016

வதிவிடங்கள் தொடர்பாக பெருந்தோட்ட மக்கள் முகம் கொடுக்கு பிரச்சினைகளை நிவர்த்தி செய்து அவர்களை சுயகௌரவத்துடன் வாழக்கூடிய உரிமையை பெற்றுக்கொடுக்கும் அபிலாஷையுடன் அரசினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு அமைய ஆரம்பிக்கப்பட்ட வீடமைப்பு அபிவிருத்தி திட்டங்கள் 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் "புதிய வாழ்க்கை" வீடமைப்பு திட்டம் எனவும், 2015 இல் அரசாங்கத்தின் 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் விசேட செயற்றிட்டமாகவும், 2016ஆம் ஆண்டு தொடக்கம் "பசும் பொன;" வீடமைப்புத் திட்டம் எனவும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. 7 பர்ச் நிலத்தில் 550 சதுர அடியில் குடிநீர் மற்றும் மலசலகூட வசதிகள் உள்ளடங்கிய "தனி வீடுகள்" வழங்கும் செயற்றிட்டம் மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் ஊடாக தொடர்ச்சியாக அமுல்படுத்தப்படும் அதேவேளை 5 ஆண்டு தேசிய நடவடிக்கைத் திட்டத்திற்கு அமைய 2020 ஆம் ஆண்டின் இறுதியில் 56,500 தனி வீடுகளை பெருந்தோட்ட சமுதாயத்திற்கு பெற்றுக் கொடுப்பது இவ்வமைச்சின் முக்கிய நோக்கமாகும். 2016.12.31 ஆம் திகதி வரை வீடமைப்பிற்காக ரூ 1099 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதற்கமைய, 2017 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீடு மற்றும் இந்திய நன்கொடையுடனான 3 முறைகளின் கீழ் இவ்வமைச்சினுடாக வீடமைப்புத்திட்டங்கள் அமுல்படுத்தப்படவுள்ள அதேவேளை இதற்காக அரசாங்க நிதி ரூ.2154 மில்லியன் மற்றும் இந்திய நன்கொடை ரூ.1134 மில்லியன் ஒதுக்கபப்ட்டுள்ளது. 2017.09.30 வரை வீடமைப்பு திட்ட நிதி முன்னேற்ற ரூ 700 மில்லியன். மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மற்றும் மண்சரிவு அபாயங்களுக்கு உள்ளான பெருந்தோட்டங்களில் வசிக்கும் மக்களுக்கு முன்னுரிமை வழங்கி இப்புதிய வீடுகளை பெற்றுக்கொடுப்பதுடன் அவ்வீடுகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளான நீர், மின்சாரம், அடைவுப் பாதைகள் என்பவற்றை பெற்றுக்கொடுக்கும் செயற்றிட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதேபோன்று பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமையை பெற்றுக்கொடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு அமைய 2017.02.09 ஆம் திகதி முதன் முறையாக அதிமேதகு ஜனாதிகபதி அவர்களினால் 71 பயனாளிகளுக்கு தூய காணி உறுதிகள் வழங்கப்பட்டதுடன் 2017.09.30 திகதிவரை 446 தூய உறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 6,624 காணி உறுதிகளை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.



### 6.1.1. பசும் பொன் வீடமைப்புத் திட்டம் (Green Gold) கிராமிய / நகராக்கல் எண்ணக்கரு - (Village/Township Concept)

2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட வீடுகள்

2017 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட "பசும் பொன்" வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 2017.09.30 திகதி வரை 2,466 வீடுகளை நிர்மாணிப்பதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றுள்ள அதேவேளை 2017 ஆம் ஆண்டு இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக 406 புதிய வீடுகளுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நுவரெலியா, ஹட்டன், கேகாலை, இரத்தினபுரி, கண்டி மற்றும் காலி ஆகிய 7 பெருந்தோட்ட பிராந்தியங்களையும் உள்ளடக்கிய வீடுகளின் நிர்மாணப்பணிகள் வெவ்வேறு மட்டங்களில் காணப்படுகின்றது. வீடொன்றின் பெறுமதி ரூ.1,000,000 என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் 48% அரசாங்கத்தின் நன்கொடையாகவும் 52% கடன் அடிப்படையிலும் வழங்கப்படுகின்றது. மண்சரிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வீடுகள் முழுமையான நன்கொடையாக வழங்கப்படுகின்றது.

**பசும்பொன் வீடமைப்புத் திட்டத்தின் முன்னேற்றம் (2017.09.30 ஆம் திகதி வரை)**

| இலக்கம் | பெருந்தோட்ட பிராந்- | கம்பனி | தோட்டத்தின் பெயர் | பிரிவு | அலகுகளின் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு ரூ.மி | 2017.09.30 வரை நிதி முன்னேற்றம் ரூ.மி |
|---|---|---|---|---|---|---|---|
| | காலி | கொட்டகலை | ஹோமாதொல | ஸ்டொக்லன்ட் | 15 | 15 | 0.38 |
| | | | | | | | 12.55 |
| 3 | | | பொரெஸ்டர் | கோவின்ன | 18 | 18 | 10.27 |
| 4 | | கொட்டகலை | அரபொலகந்த | லிஸ்கிலன் | 29 | 29 | 0.73 |
| 5 | | கொட்டகலை | கீகியனகந்த | வெஸ்ட் | 12 | 12 | - |
| 6 | | கொட்டகலை | வோகன் | இத்தகொட | 22 | 22 | - |
| 7 | | கொட்டகலை | டெல்கித் | பிரின்ஸிலோன் | 21 | 21 | - |
| 8 | | ஹொரண | கொபோவெல | கொபோவெல | 21 | 21 | - |
| 9 | | ஹொரண | நிவ்செடல் | ஹோம் | 31 | 31 | 0.78 |
| 10 | | ஹொரண | நிவ்செடல் | டெம்போ | 25 | 25 | 0.63 |
| 11 | | ஹொரண | மில்லகந்த | சென்.பிரன்ஸிஸ் | 6 | 6 | - |
| 12 | | ஹொரண | மில்லகந்த | என்டஸன் | 5 | 5 | - |
| 13 | | ஹொரண | மில்லகந்த | மிரிகிகெலே | 4 | 4 | - |
| 14 | | ஹொரண | மில்லகந்த | நிவ் | 5 | 5 | - |
| 15 | | தலவாக்கலை | இந்தொல | மாவரல | 10 | 10 | - |
| 16 | | நமுனுகுல | தென்னஹேன | தங்கொட்டுவ | 5 | 5 | - |
| 17 | | நமுனுகுல | பெலவத்த | கீழ் ஹெவெஸ்ஸ | 5 | 5 | - |
| | **மொத்தம்** | | | | 256 | 256 | 25.34 |

தொடர்ச்சி......

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | இரத்தினபுரி | பலங்கொட | ராஸ்ஸகல | ஓவெல்ல | 12 | 12 | 0.30 |
| 2 | | ஹபுகஸ்தென்ன | மாதம்பே | இல.03 | 25 | 25 | 7.86 |
| 3 | | ஹபுகஸ்தென்ன | ஸ்பிரின்வூட் | பாலம்கோட்டை | 20 | 20 | 6.79 |
| 4 | | ஹபுகஸ்தென்ன | ஹபுகஸ்தென்ன | UWK | 31 | 31 | 6.45 |
| 5 | | பலங்கொட | சிசில்டன் | சிசில்டன் | 12 | 12 | 4.02 |
| 6 | | கேகாலை | ஓபேகம | ஓபேகம | 2 | 2 | - |
| 7 | | புஸ்ஸல்லாவ | திவுரும்பிட்டிய | வலங்கல | 32 | 32 | 8.74 |
| 8 | | கஹவத்த | போரனுவ | கிரிபத்கல | 18 | 18 | - |
| 9 | | கஹவத்த | எக்ரெல்ல | இலுக்கும்புர | 12 | 12 | - |
| 10 | | அகலவத்தை | நுராகல | கீழ் | 1 | 1 | - |
| 11 | | அகலவத்தை | க்ளுடன் | பன்டிய | 1 | 1 | - |
| 12 | | பலங்கொட | மில்லவிடிய | பாரகெடிய | 1 | 1 | - |
| 13 | | பலங்கொட | மெதகந்த | வெலகும்புர | 18 | 18 | - |
| 14 | | பலங்கொட | முதவாகல | கீழ் | 4 | 4 | - |
| 15 | | ஹபுகஸ்தென்ன | ஹபுகஸ்தென்ன (R) | லெல்லோபிட்டிய | 54 | 54 | - |
| 16 | | ஹபுகஸ்தென்ன | ஹபுகஸ்தென்ன (T) | கீழ் வேவெல்டெ-கடிய | 18 | 18 | - |
| **மொத்தம்** | | | | | 261 | 261 | 34.16 |
| 1 | பதுளை | ஹபுகஸ்தென்ன | பூனாகல | டுடுபு | 59 | 59 | 5.47 |
| 2 | | பலங்கொட | அம்பிடிகந்த | கீழ் 1 | 52 | 52 | 17.64 |
| 3 | | பலங்கொட | அம்பிடிகந்த | கீழ் 2 | 45 | 45 | 15.27 |
| 4 | | பலங்கொட | அம்பிடிகந்த | கீழ் 3 | 30 | 30 | 10.18 |
| 5 | | பலங்கொட | அம்பிடிகந்த | கீழ் 4 | 30 | 30 | 6.45 |
| 6 | | | | பிலகடவூட் | 43 | 43 | 9.25 |
| 7 | | ஹபுகஸ்தென்ன | பிபிலே | 400 ஏக்கர் | 13 | 13 | 0.33 |
| 8 | | பலங்கொட | வேவெஸ்ஸ | வேவெஸ்ஸ | 18 | 18 | 3.87 |
| **மொத்தம்** | | | | | 290 | 290 | 68.46 |
| 1 | கேகாலை | | யடிதெரிய | நோத்பிரோக் | 20 | 20 | 2.40 |
| 2 | | **லாலன்** | டென்ஸ்வத்த | டென்ஸ்வத்த | 23 | 23 | 12.46 |
| | | | | | 25 | 25 | - |
| 3 | | **களனிவெலி** | தேவாலகந்த | துனாதின் | 19 | 19 | 6.45 |
| 4 | | | எதுராபொல | வெஸ்ட் | 10 | 10 | - |
| 5 | | **லாலன் இறப்பர்** | வூட்என்ட் | தல்பிட்டிய | 8 | 8 | - |
| **மொத்தம்** | | | | | 105 | 105 | 21.31 |

தொடர்ச்சி......

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | புஸ்ஸல்லாவ | முல்லோயா | கடியென்லென | 20 | 20 | 0.50 |
| 2 | | JEDB | ஹோப் | மிட்ல் | 25 | 25 | 7.24 |
| 3 | | JEDB | முல்லோயா | டொப் | 20 | 20 | 6.79 |
| 4 | | JEDB | கந்தல்ஓயா | மேல் | 20 | 20 | 6.16 |
| 5 | | கஹவத்த | வெஸ்ட்ஹோல் | மேமலை | 28 | 28 | 0.70 |
| 6 | | கஹவத்த | பாகபல் | ரிலாகல்ல | 15 | 15 | 5.09 |
| 7 | | | கட்டபுலா | டொப் | 15 | 15 | 0.38 |
| 8 | | கஹவத்த | கலபொட | ஹுனுகொட்டுவ | 20 | 20 | 2.15 |
| 9 | கண்டி | கஹவத்த | இம்புல்பிட்டிய | கீழ் | 20 | 20 | 4.30 |
| 10 | | புஸ்ஸல்லாவ | லெவ்லோன் | கல்ஓயா | 20 | 20 | 4.30 |
| 11 | | புஸ்ஸல்லாவ | டெல்ட்டா | கொல்கிரேன் | 25 | 25 | 13.57 |
| 12 | | கஹவத்த | சோகம | வடக்கு | 6 | 6 | 0.15 |
| 13 | | கஹவத்த | பாகபல் | கீழ் | 20 | 20 | 4.30 |
| 14 | | எல்கடுவ | எல்கடுவ | கீழ் | 15 | 15 | 0.38 |
| 15 | | SLSPC | ஹுன்னஸ்கிரிய | தொதலாவ | 20 | 20 | 11.41 |
| 16 | | SLSPC | மெல்போட் | UMO | 16 | 16 | 5.43 |
| 17 | | SLSPC | ஓபலகம | நிவ் மெல்போட் | 10 | 10 | 2.15 |
| 18 | | | □அஇ.இ | எலகொல்ல | 14 | 14 | 0.50 |
| **மொத்தம்** | | | | | 329 | 329 | 75.50 |
| 1 | | மடுல்சீம | வென்சர் | லோரன்ஸ் மேல் | 10 | 10 | 0.25 |
| 2 | | வடவளை | ஸ்டெரதன் | புருட்ஹில் | 50 | 50 | 14.45 |
| 3 | | வடவளை | ஸ்டெரதன் | ஸ்டெரதன் | 50 | 50 | - |
| 4 | | பொகவந்தலாவ | லெதண்ட்டி | லெதண்ட்டி | 15 | 15 | 4.46 |
| 5 | | வடவளை | அபோட்ஸ்லி | ப்ளோரன்ஸ் | 20 | 20 | 0.50 |
| 6 | | வடவளை | டிக்ஓயா | பூல்பேங்க் | 20 | 20 | 4.30 |
| 7 | | வடவளை | டிக்ஓயா | டிக்ஓயா | 20 | 20 | 0.50 |
| 8 | | பொகவந்தலாவ | கெம்பியன் | ருஃனு | 28 | 28 | 0.70 |
| 9 | | மடுல்சீம | தெரேசியா | டிலரி | 30 | 30 | 0.75 |
| 10 | ஹட்டன் | மடுல்சீம | ககஸ்வேல்ட் | மிட்ல் | 30 | 30 | 6.45 |
| 11 | | மடுல்சீம | ககஸ்வேல்ட் | கீழ் | 25 | 25 | 5.38 |
| 12 | | மஸ்கெலியா | பிரவுன்லோ | பிரவுன்லோ | 20 | 20 | 5.54 |
| 13 | | மஸ்கெலியா | மவுசாகலை | மவுசாகலை | 20 | 20 | 4.30 |
| 14 | | மஸ்கெலியா | ஸ்டெரெதெஸ்பி | ஓம்டடேல் | 25 | 25 | 14.26 |
| 15 | | பொகவந்தலாவ | பொயிஸ்டன் | நிவ்டன் | 20 | 20 | 0.50 |
| 16 | | களனிவெலி | இன்சஸ்ட்ரி | ஹொன்சி | 20 | 20 | 6.76 |
| 17 | | கொட்டகலை | போகாவத்தை | கீழ் | 60 | 60 | 16.13 |
| 18 | | கொட்டகலை | மவுன்வெர்னன் | திம்புள்ள | 25 | 25 | 7.24 |
| 19 | | கொட்டகலை | மவுன்வெர்னன் | மிட்ல் | 55 | 55 | 21.42 |
| 20 | | கொட்டகலை | டிரேட்டன் | DT | 50 | 50 | 10.75 |
| 21 | | ஹொரண | டில்குல்ட்ரி | மவுஸ்ஸாஎல்ல | 30 | 30 | 6.45 |

தொடர்ச்சி.....

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 22 | ஹட்டன் | மஸ்கெலியா | பர்லன் | தலங்கந்த | 20 | 20 | 5.54 |
| 23 | | தலவாக்கலை | தலவாக்கலை | தலவாக்கலை | 20 | 20 | 4.30 |
| 24 | | கொட்டகலை | யுலிபீல்ட் | YF | 27 | 27 | 0.68 |
| 25 | | | கௌரவில | B | 17 | 17 | 0.38 |
| 26 | | | ஹரிங்டன் | | 25 | 25 | - |
| 27 | | கொட்டகலை | யுலிபீல்ட் | யுலிபீல்ட் | 1 | 1 | - |
| 28 | | மஸ்கெலியா | பிரவுன்ஸ்விக் | எமலினா | 18 | 18 | - |
| 29 | | மஸ்கெலியா | மவுசாகலை | நயன்சா மேல் | 20 | 20 | - |
| **மொத்தம்** | | | | | 771 | 771 | 141.99 |
| 1 | நுவரெலியா | தலவாக்கலை | லோகி | லோகி | 15 | 15 | 5.09 |
| 2 | | தலவாக்கலை | கிரேட்வெஸ்டன் | ஸ்கல்பா | 20 | 20 | 6.79 |
| 3 | | தலவாக்கலை | பின்லன்ட் | கய்புகல | 20 | 20 | 6.79 |
| 4 | | களனிவெலி | பீட்ரு | லவர்ஸ்லிப் | 30 | 30 | 10.01 |
| 5 | | புஸ்ஸல்லாவ | கோட்லொட்ச் | போஸ்வூட் | 15 | 15 | 5.09 |
| 6 | | தலவாக்கலை | ரதல்ல | மேல் | 24 | 24 | 6.77 |
| 7 | | | வெவர்லி | போட்மோர் | 24 | 24 | - |
| 8 | | வடவளை | வோல்ட்ரீம் | மெராயா | 20 | 20 | 4.30 |
| 9 | | வடவளை | ஹென்போல்ட் | கிளனீகல்ஸ் | 25 | 25 | 8.48 |
| 10 | | வடவளை | ஹென்போல்ட் | ஆக்ரா | 24 | 24 | 5.06 |
| 11 | | வடவளை | ஹுட்வில் | பிரேமோர் | 7 | 7 | 0.25 |
| 12 | | TRI | சென் கூம்ஸ் | கீழ் | 25 | 25 | 7.74 |
| 13 | | எல்பிட்டிய | சீன் | மேல் பூண்டுலொயா | 35 | 35 | 0.88 |
| 14 | | மதுரட்ட | லிடஸ்டேல் | AB | 35 | 35 | 14.25 |
| 15 | | மதுரட்ட | கபரகல | மேல் | 14 | 14 | 4.74 |
| 16 | | | வோல்ட்ரீம் | கொவ்லஹேன | 48 | 48 | 10.32 |
| 17 | | | சென் கூம்ஸ் | லெமிலியர் | 7 | 7 | 2.20 |
| 18 | | | புரொடொப் | | 50 | 50 | - |
| 19 | | | கொன்கோடியா | டென்மார்க்ஹில் | 16 | 16 | - |
| **மொத்தம்** | | | | | 454 | 454 | 98.76 |
| **முழு மொத்தம்** | | | | | 2466 | 2,466 | 465,52 |

## நீடிக்கப்பட்ட வீடமைப்புத் திட்டங்கள் ( Carried Over)

“புதிய வாழ்க்கை” வீடமைப்புத் திட்டத்தின் கீழ் நீடிககப்பட்ட 10 வீடுகளின் நிர்மாணப்பணிகள் இவ்வாண்டில் நிறைவு செய்யப்பட்டது. 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட “பசும் பொன்” வீடமைப்புத் திட்டத்தின் 1430 வீடுகளில் 493 வீடுகளின் நிர்மாணப்பணிகள் 2016 ஆம் ஆண்டிலேயே நிறைவுசெய்யப்பட்டு நீர், மின்சாரம், பாதை வசதிகள் போன்ற உட்கட்மைப்பு வசதிகளுடன் பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்தில் 2017 ஆம் ஆண்டிற்கு நீடிக்கப்பட்ட 937 வீடுகளில் 26 வீடுகள் 2017 ஆம் ஆண்டிற்கான “பசும் பொன்” வீடமைப்புத் திட்டத்திற்கு மாற்றப்பட்டதுடன் மேலும் 35 வீடுகளின் நிர்மாணப்பணிகள் சூழல் பிரச்சினைகள் காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. மேலும் 876 வீடுகளில் 238 வீடுகளின் நிர்மாணப்பணிகள் 2017 செம்டெம்பர் மாதத்தில் நிறைவுசெய்யப்பட்டுள்ளது. அனைத்து வீடமைப்பும் இவ்வாண்டு டிசெம்பர் மாதத்திற்குள் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

## பசும்பொன் வீடமைப்புத் திட்டத்தின் நீடிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் முன்னேற்றம் (2017.09.30) (Carried Over)

| பெருந்தோட்ட பிராந்தியம் | பெருந்தோட்ட கம்பனி | தோட்டத்தின் பெயர் | பிரிவு | வீடுகளின் எண்ணிக்கை | நிதி முன்னேற்றம் | | பௌதீக முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | ஒதுக்கீடு | 2017.09.30 திகதியில் முன்னேற்றம் | முடிவு ற்றவை | நடை முறையில் உள்ளவை |
| காலி | நமுனுகுல | ஹுலந்தாவ | | 25 | 16.25 | 14.50 | 20 | 5 |
| | | | | 25 | 16.25 | 14.50 | 20 | 5 |
| இரத்தினபுரி | பலங்கொட | பலங்கொட | மாரதென்ன | 31 | 20.15 | 5.70 | | 31 |
| | பலங்கொட | பலங்கொட | தெதனகல | 19 | 12.35 | 8.50 | | 19 |
| | கஹவத்த | மேல் | யாயின்த | 15 | 9.75 | 7.60 | | 15 |
| | பலங்கொட | பெட்டிகல | மேல் | 48 | 31.20 | 14.90 | | 48 |
| | | | | 113 | 73.45 | 36.70 | | 113 |
| பதுளை | | பிடரத்மலை | மேல் | 47 | 30.55 | 10.20 | | 47 |
| | | | | 47 | 30.55 | 10.20 | | 47 |
| கேகாலை | களனிவெலி | பானவத்த | Plan 4 | 14 | 9.10 | 7.90 | | 14 |
| | களனிவெலி | களுபஹன | நிர்மலே | 9 | 5.85 | 5.00 | 9 | |
| | களனிவெலி | களுபஹன | வஹரக | 7 | 4.55 | 2.00 | | 7 |
| | களனிவெலி | களுபஹன | களுகஹன i | 4 | 2.60 | 2.10 | | 4 |
| | களனிவெலி | களுபஹன | களுபஹன (i & ii) | 80 | 52.00 | 17.40 | 24 | 56 |
| | கேகாலை | அட்டாலே | நிவ் அரந்தர | 12 | 7.80 | 1.60 | | 12 |
| | | | | 126 | 81.90 | 36.00 | 33 | 93 |
| கண்டி | புஸ்ஸல்லாவ | கிராகம | கோனடிக்கா | 15 | 9.75 | 2.10 | | 15 |
| | கஹவத்த | கலமுதுன | வின்டர் பொடஸ்ட் | 11 | 7.15 | 2.20 | | 11 |
| | | | ஹுலங்கந்த | 23 | 14.95 | 7.70 | | 23 |
| | கஹவத்த | போஹில் | போஹில் | 16 | 10.40 | 7.00 | | 16 |
| | கஹவத்த | கிரஹேட் | மேல் | 15 | 9.75 | 5.00 | | 15 |
| | | | | 80 | 52.00 | 24.00 | | 80 |
| ஹட்டன் | மஸ்கெலியா | | பிரவுன்ஸ்விக் | 25 | 16.25 | 14.60 | 25 | |
| | ஹொரண | மஹநிலு | மஹநிலு | 15 | 9.75 | 7.50 | | 15 |
| | கொட்டகலை | | ரொசிட்டா | 23 | 14.95 | 13.40 | 23 | |
| | களனிவெலி | இன்ஜஸ்ட்ரி | மேபீல்ட் | 7 | 9.75 | 5.10 | | 7 |
| | | கொடியாகல | கீழ் | 184 | 117.55 | 85.59 | 43 | 141 |
| | | | | 254 | 168.25 | 126.19 | 91 | 163 |
| நுவரெலியா | | ஹுட்வில் | டொரிங்டன் | 150 | 95.49 | 54.81 | 71 | 79 |
| | எல்பிட்டிய | மடகும்புர | மேல் கீழ் | 23 | 14.95 | 13.00 | 23 | |
| | அகலவத்தை | வெதமுள்ள | வெவன்டன் | 58 | 37.70 | 5.30 | | 58 |
| | | | | 231 | 148.14 | 73.14 | 94 | 137 |
| மொத்தம் | | | | 876 | 570.54 | 320.70 | 238 | 638 |

## 6.2.2 இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்படும் வீடமைப்புத் திட்டம்

இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இச்செயற்றிட்டத்தின் ஊடாக 4000 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளது. வீடொன்றிற்கான செலவு ரூபா 1 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ள இச்செயற்றிட்டத்தில் இந்திய அரசாங்கத்தால் ரூ. 950,000 உம், அதற்குரிய பெருந்தோட்டக் கம்பனியினால் ரூ. 30,000 உம், பயனாளியினால் ரூ.20,000 உம் வழங்கப்படுகின்றது. இவ்வீடமைப்புத் திட்டத்திற்கு தேவையான குடிநீர் வசதி, மின்சாரம், அடைவுப் பாதைகள் உள்ளடங்கிய ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்றது. அதற்கமைய அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 2017 ஆண்டிற்காக ரூ.154 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அதேவேளை இந்திய அரசாங்கத்தினால் ரூ. 1,134 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 1ம் கட்டம்

இந் நிகழ்ச்சித் திட்டத்தின் முதற் கட்டமாக 1,134 வீடுகளின் நிர்மாணப்பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 2017 செப்டெம்பர் மாத இறுதியில் 75 வீடுகளின் நிர்மாணப்பணிகள் நிறைவடைந்துள்ளன. ஏனைய 1,059 வீடுகளின் நிர்மாணப்பணிகள் வெவ்வேறு மட்டங்களில் காணப்படுகின்றது.

### 2ம் கட்டம்

இதன் கீழ் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மற்றும் மண்சரிவு அபாயத்தை எதிர்நோக்கி இருக்கும் பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு முன்னுரிமை வழங்குவதுடன் 2,866 வீடுகளை நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்குரிய பெருந்தோட்டக் கம்பனி, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் ஆகியவற்றுடன் இணைந்து நிலங்களை அடையாளம் காணும் பணி இடம்பெற்று வருகின்றது.







## இந்திய நன்கொடையுடன் இடம்பெறும் வீடமைப்புத் திட்டத்தின் முதற்கட்டத்தின் முன்னேற்றம் (2017.09.30)

| பெருந்தோட்ட மனிதவள அபிவி-ருத்தி நிதியம் | தோட்டம் | பிரிவு | வீடுகளின் எண்ணிக்கை | அடிப்படை நடவடிக்கைகள் | | நிர்மாணப்பணிகளின் பௌதீக முன்னேற்றம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | நிலத்தை தயார் படுத்துதல் | பயனாளிகள் தெரிவு | நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளவை | அடித்தள மட்டம் | சுவர் மட்டம் | கூரை மட்டம் | வேலை நிறைவு பெற்றுள்ளவை | நிறைவுபெற்றுள்ள மொத்த வீடுகளின் எண்ணிக்கை |
| ஹட்டன் | பொகவான | பிரிட்வேல் | 155 | 125 | 148 | 92 | 36 | 40 | 16 | | |
| | | லின்ஸ்டட் | 100 | ஆரம்பிக்கப்பட வில்லை | 83 | - | - | | | | |
| | | பொ-கவான | 100 | ஆரம்பிக்கப்பட வில்லை | 101 | - | - | | | | |
| | | மொத்தம் | 355 | 125 | 332 | 92 | 36 | 40 | 16 | | |
| பதுளை | லெச்சர்வ-த்த | லெச்சர்வ-த்த | 75 | 42 | 75 | 25 | 25 | | | | |
| | | நாரங்கல | 50 | 20 | 50 | | - | | | | |
| | | மொத்தம் | 125 | 62 | 125 | 25 | 25 | | | | |
| நுவரெலியா | டன்சினன் | Factory Site | 200 | 146 | 158 | 146 | 40 | 21 | 33 | 19 | 33 |
| | | மிட்ல் | 204 | 65 | 91 | 38 | 33 | 5 | | | |
| | டயகம மே-ற்கு | 1ம் பிரிவு | 150 | 150 | 134 | 95 | 4 | 31 | 5 | 13 | 42 |
| | | மொத்தம் | 554 | 361 | 383 | 279 | 77 | 57 | 38 | 32 | 75 |
| கண்டி | ஹெல்பொட | ஹெல்பெ-ாட | 100 | 94 | 100 | 88 | 59 | 29 | | | |
| | | மொத்தம் | 100 | 94 | 100 | 88 | 59 | 29 | | | |
| மொத்தம் | | | 1,134 | 642 | 940 | 484 | 197 | 126 | 54 | 32 | 75 |

## பயனாளிகள் கட்டும் வீடமைப்புத் திட்டம்

2005 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை பெருந்தோட்டப் பிரதேசங்களில் ஏறக்குறைய 30,000 வீடுகள் அரசாங்கத்தினாலும், வெவ்வேறு அமைப்புக்களினாலும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அவற்றில் பெரும்பாலான வீடுகள் தற்பொழுது இவ்வமைச்சின் கீழ் காணப்படும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் ஒருங்கிணைப்பின் ஊடாக தோட்ட தொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் மூலமாக நிர்மாணிக்கப்பட்டவை.

இவற்றுக்கு மேலதிகமாக புதியதோர் முயற்சியாக இவ்வமைச்சு, 2017 ஆம் ஆண்டு தொடக்கம் பயனாளிகளினால் கட்டும் முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. தொழிலாளர்கள் வேலைசெய்யும் தோட்டங்களிலேயே இவ்வீடுகள் அமைக்கப்படுவதனால், பயனாளிகள் நிர்மாணப்பணிகள் தொடர்பான முழுப் பொறுப்பையும் தாமே ஏற்று, உறுதியாகவும்,

சிக்கனமாகவும் நிர்மாணித்துக்கொள்கின்றனர். வீடமைப்பிற்காக வழங்கப்படும் நிதி எஞ்சுமாயின் அதனைக்கொண்டு அவ்வீட்டில் வெவ்வேறு அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும். இதன் மூலமாக பெருந்தோட்ட மக்களுக்கு தங்களின் தீர்மானத்திற்கு அமைய, தங்களது பங்களிப்புடன் அமைக்கப்படும் வீடுகள் உரித்தாகும் அதேவேளை அவர்களது தங்கி வாழும் மனநிலையிலும் மாற்றம் ஏற்படும்.

"பசும் பொன்" வீடமைப்புத் திட்டத்தைப் போன்றே இங்கும் 7 பர்சஸ் நிலத்தின் உரிமையும், 550 சதுர அடிப்பரப்பிலான வீட்டின் உரிமையும் பயனாளிகளுக்கு கிடைக்கப்பெறும். இதில் வராந்தை, வரவேற்பறை, 2 படுக்கையறைகள், சமையலறை மற்றும் இணைந்த மலசலகூடம் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்நிர்மாணப்பணிகளுக்கான அடிப்படை செலவினங்களுக்காக ரூ. 50,000 மற்றும் வீடமைப்பிற்காக ரூ.950,000 மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கமைய ஒரு வீட்டின் பெறுமதி ரூ.1,000,000 ஆகும். இதில் 52% 15 வருடங்களில் மீளச்செலுத்தப்படும் கடன் அடிப்படையிலும், 48% நன்கொடை அடிப்படையிலும் வழங்கப்படுகின்றது.

## நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்படும் முறை


வீடமைப்பிற்கான காணிகளைப் பெற்றுக்கொள்ளும் செயன்முறை பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் ஊடாக பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் பங்களிப்புடன் இடம்பெற்று. தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு காணிகள் வழங்கப்படும்.

5-8 பேர் சர்ந்த சிறு குழுக்கள் அமைக்கப்பட்டு அவற்றுக்கு தலைவர் ஒருவர் நியமிக்கப்படுவார்.


வீடமைப்புச் சங்கத்தில், குறித்தக் குழுத் தலைவர், தோட்டத் தொழிலாளர் வீடமைப்புக் கூட்டுறவு சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் ஓர் அதிகாரியும் இடம்பெறுவர்.

வீடுகளின் நிர்மாணப்பணிகளுக்காக தேவைப்படும் மூலப்பொருட்களை குறைந்த விலையில் பெற்றுக்கொடுப்பது சங்கத்தின் பொறுப்பாகும். அதேபோன்று பயனாளிகளுக்கு அது தொடர்பான விபரங்களை வழங்குவதற்கான கடப்பாடும் அவர்களுக்கு உண்டு.

## அமைச்சினால் நிர்மாணிக்கப்படும் வீட்டின் வரைபடம்




முகப்புத்தோற்றம்




வீட்டின் வரைபடம்





## 6.2 பின்தங்கிய பிரதேசங்களில் சமூக பொருளாதார அபிவிருத்தி

மிகவும் குறைவான வசதிகளின் கீழ் வாழ்ந்துவரும் பெருந்தோட்ட மக்களுக்கு குடிநீர் வசதிகளை ஏற்படுத்தல், மலசலகூட வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல், அடைவுப் பாதைகளை புதுப்பித்தல், லைன் அறைகளில் கூரைகளை மீண்டும் பொருத்துதல், சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை நிர்மாணித்தல், சமய மற்றும் கலாசார நிலையங்களை நிர்மாணித்தல் போன்ற பல்வேறுபட்ட அபிவிருத்தி கருத்திட்டங்கள் இதன் கீழ் அமுல்படுத்தப்படுகின்றன.

இதற்கு மேலதிகமாக திடீர் அனர்த்த நிலைமைகளுக்கு ஆளான பெருந்தோட்ட மக்களுக்கு தற்காலிக இருப்பிடங்களை ஒழுங்குபடுத்திக் கொடுத்தல் மற்றும் அதற்கு தேவையான வசதிகளை செய்வதற்கான இடைக்கால நடவடிக்கைகளும் இதன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

2017 ஆம் ஆண்டில் பின்தங்கிய பிரதேசங்களில் சமூக பொருளாதார அபிவிருத்திக்காக அமைச்சினால் 500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அதேவேளை, 2016 ஆம் ஆண்டின் இறுதியில் அனுமதி வழங்கப்பட்ட 2017ஆம் ஆண்டிற்கு நீடிக்கப்பட்ட கருத்திட்டங்களுக்காக 10 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

**நீடிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் முன்னேற்றம் (2017.09.30 வரை)**

| இல | செயற்றிட்டம் | எண்ணிக்கை | 2017 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு | 2017.09.30 திகதி வரையான செலவு | 2017.09.30 ஆம் திகதியில் முடிவடைந்துள்ள செயற்றிட்டங்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | விளையாட்டு மைதானம் | 2 | 1.42 | 0.89 | 2 |
| 2 | அபிவிருத்தி நிலையங்களின் அபிவிருத்தி | 2 | 2.56 | 1.00 | 1 |
| 3 | சமய வழிபாட்டுத் தலங்கள் மற்றும் கலாசார நிலையங்களின் அபிவிருதத்தி | 3 | 2.18 | 1.27 | 3 |
| 4 | குடிநீர் செயற்றிட்டங்கள் | 3 | 2.10 | 1.66 | 3 |
| 5 | பாடசாலை அபிவிருத்தி | 1 | 0.13 | - | 1 |
| 6 | வேறு (பாதுகாப்பு சுவர்கள் போன்றவை) | 2 | 0.68 | 0.49 | 2 |
| 7 | மலசலகூடங்கள் (10) | 1 | 0.23 | 0.22 | 1 |
| 8 | வீதி அபிவிருத்தி செயற்றிட்டங்கள் | 1 | 0.38 | 0.29 | 1 |
| மொத்தம் | | 15 | 9.68 | 5.82 | 14 |

## 2017 ஆம் ஆண்டில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களும் அவற்றின் முன்னேற்றமும்

### 6.2.1. கூரைகள் பழுதடைந்து வாழ்வதற்கு தகுதியற்றதாக காணப்படும் 1640 லயன் வீடுகளின் கூரைகளை மீண்டும் பொருத்துதல்

அனைத்து பெருந்தோட்ட மக்களுக்குமான வீடமைப்பு என்பது நீண்டதொரு செயற்றிட்டமாக அமைவதால் அதுவரை அவர்கள் வசிக்கும் வீடுகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக இச்செயற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது.

அதற்கமைய, 2016.12.31 ஆம் திகதி வரையில் 135 மில்லியன் ரூபா செலவில் 1,605 வீடுகளுக்கான கூரைகள் மீளப் பொருத்தப்பட்டன, அத்துடன் 2017 ஆம் ஆண்டில் மேலும் 1,200 வீடுகளின் கூரைகளை மீளப்பொருத்துவதற்காக 60 மில்லியன் ரூபா அமைச்சினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2017 செப்டெம்பர் மாத இறுதிவரை 26 மில்லியன் ரூபா பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் நுவரெலியா, ஹட்டன், கேகாலை, பதுளை, இரத்தினபுரி, கண்டி பிராந்தியங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 452 லயன் வீடுகளுக்கான கூரைகள் மீளப்பொருத்தப்பட்டுள்ளன.

### 6.2.2. சுகாதார ரீதியில் பாதுகாப்பான குடிநீர் வசதிகள்

பெரும்பாலான நீர் ஊற்றுகள் பெருந்தோட்ட குடியிருப்புகள் அமைந்துள்ள பிரதேசங்களில் ஆரம்பமானாலும் பாதுகாப்பான குடிநீர் அவர்களில் சிலருக்கு மட்டுமே கிடைக்கின்றது. குடிநீர் வளங்கள் பாதுகாப்பற்றதாக காணப்படுவதனால் பெருந்தோட்ட மக்கள் நீரின் மூலம் பரவுகின்ற வாந்திபேதி போன்ற நோய்களுக்கு உள்ளாகும் சந்தர்ப்பங்கள் அதிகமாகக் காணப்படுகின்றது. இவ்வாறாக அடையாளம் காணப்பட்ட பிரதேசங்களில் குடிநீர் கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வமைச்சினால் அமுல்படுத்தப்பட்டுள்ள 2016 - 2020 ஆம் ஆண்டை உள்ளடக்கிய தேசிய நடவடிக்கைத் திட்டத்திற்கு அமைவாக 2020 ஆம் ஆண்டின் இறுதியில் 500 நீர் வழங்கல் கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்படவுள்ளதுடன் கீழ் வரும் விடயங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படவுள்ளது.

- புதிய நீர் மூலங்கள் மற்றும் நீரூற்றுக்களை இனங்காணல்
- நீர் மூலங்களையும் நீர் ஊற்றுக்களையும் பாதுகாப்பதற்காக அதனை அண்மித்த பிரதேசங்களின் எல்லைகளை நிர்ணயம் செய்தல்
- திறந்த வெளியில் மலசலம் கழிப்பதை தவிர்ப்பதற்காக தோடட்களில் மலசலகூடங்களை அமைத்தல்
- நீர் வழங்கல் மற்றும் நீர் சுத்திகரிப்பு முறைகளை அறிமுகப்படுத்தல்.
- நீர் மூலங்களை பாதுகாத்தல்
- பயனாளிகளின் பங்களிப்பிலான முறையை அறிமுகப்படுத்துதல்

2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு முடிவடையாத நிலையில் காணப்பட்ட 4 குடிநீர் வழங்கல் கருத்திட்டங்களில் 2 கருத்திட்டங்களின் பணிகள் 2017 செப்டெம்பர் மாத இறுதியில் நிறைவடைந்துள்ளது. 2017 ஆம் ஆண்டில் 80 கருத்திட்ங்களுக்காக 36 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2017.09.30 ஆம் திகதி வரையில் 62 கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதுடன் அதில் 54 கருத்திட்டங்கள் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் மூலமாகவும் 8 கருத்திட்டங்கள் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களின் ஊடாகவும் முன்னெடுக்கப்படுகின்றது. 2017.09.30 ஆம் திகதிக்கு நிதி முன்னேற்றம் 17 மில்லியன் ரூபாவாகும் அதேவேளை 2017.12.30 திகதி வரை குடிநீர் வழங்கல் கருத்திட்டங்களுக்கான மொத்த செலவு 77 மில்லியன் ரூபா ஆகும்

**2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்க்பட்ட நீர் வழங்கல் செயற்றிட்டங்கள் (2017.09.30 வரை)**

| அமுல்படுத்தும் நிறுவனம் | எண்ணிக்கை | முன்னேற்றம் - பிரதேச மட்டத்தில | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | நுவ-ரெலியா | ஹட்டன் | இரத்தின-புரி | காலி | கேகாலை | பதுளை | கண்டி |
| பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் | 54 | 8 | 5 | 24 | 5 | 5 | 3 | 4 |
| மாவட்ட செயலகம் / பிரதேச செயலகம் | 08 | 5 | - | 2 | - | - | 1 | - |
| மொத்தம் | 62 | 13 | 5 | 26 | 5 | 5 | 4 | 4 |

### 6.2.3. மலசலகூட வசதிகளை வழங்குதல்

தரவு ஆய்வு அறிக்கைகளுக்கமைய தோட்டப்புற சமுதாயத்தில் 25% ற்கும் மேற்பட்டவர்களுக்கு மேம்படுத்தப்பட்ட சுகாதார வசதிகள் கிடைக்கவில்லை என்பது தெரியவருகின்றது. லயன் அறைகளில் வாழும் மக்களுக்காக போதுமான அளவில் மலசலகூட வசதிகளை வழங்கும் நோக்குடன் 2016 - 2020 உட்பட்ட 5 வருடங்களில் 20,000 புதிய மலசலகூட வசதிகளை வழங்கவுள்ள அதேவேளை 2017ம் ஆண்டின் ஆரம்பத்தில் 60 மில்லியன் ரூபா செலவில் 1,232 மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது. அதே போன்று 2017 ஆம் ஆண்டில் 650 புதிய மலசலகூடங்களை அமைப்பதற்காக அமைச்சினால் 37 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இவற்றுள் 2017.09.30 வரையில் 589 மலசலகூடங்களை அமைப்பதற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதில் 489 மலசலகூடங்கள் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தினாலும், கேகாலை மாவட்ட செயலகத்தினால் 100 மலசலகூடங்களில் அமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2017.09.30 ஆம் திகதிக்கான மொத்த நிதி முன்னேற்றம் ரூ. 17 மில்லியன்.

**2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மலசலகூட செயற்றிட்டங்கள் (2017.09.30 வரை)**

| அமுல்படுத்தும் நிறுவனம் | எண்ணிக்கை | நுவரெலியா | ஹட்டன் | இரத்தினபுரி | காலி | கேகாலை | பதுளை | கண்டி |
|---|---|---|---|---|---|---|---|---|
| பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் | 489 | 60 | 137 | 20 | 102 | 52 | 60 | 58 |
| மாவட்ட செயலகம் | 100 | - | - | - | - | 100 | - | - |
| மொத்தம் | 589 | 60 | 137 | 20 | 102 | 152 | 60 | 58 |

### 6.2.4. சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை நிர்மாணித்தல்/நவீனமயப்படுத்தல்

இலங்கையில் பெருந்தோட்ட துறையின் ஆரம்ப காலம் தொடக்கம் தொழிலாளர்களின் 2-5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் பராமரிப்பு சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் ஊடாகவே நடைமுறைப்படுத்தப்பட்டது. 2 வயதுக்கு குறைந்த குழந்தைகளை பராமரிப்பது மற்றும் 3-5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் சமூக செயற்பாடுகளை அபிவிருத்தி செய்தல், தாய் மொழி தேர்ச்சி, அழகியற் செயற்பாடுகளையும் புத்திகூர்மையான செயற்பாடுகளையும் அதிகரித்தல், குழந்தைகளை பாடசாலை கல்விக்கு பயிற்றுவித்தல் போன்ற செயற்பாடுகள் சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் ஊடாக இடம்பெறுகின்றது.

பெருந்தோட்டதுறை சிறுவர்களின் ஆரம்ப பராய சிறுவர் அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகள் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக இடம்பெறுகின்றது. 1,154 சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் தோட்ட முகாமைத்துவத்தின் கீழ் இயங்கிவருகின்றன.

இடப்பற்றாக்குறை, உபகரண பற்றாக்குறை, முறையான பராமரிப்பு இன்மை, குழந்தைகளை பராமரிப்பவர்களின் மற்றும் ஆசிரியர்களின் திறன் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு 62% நிலையங்கள் "ஏ" மற்றும் "பீ" தரத்திலும் குறைந்த வசதிகளைக் கொண்ட 38% "சீ" மற்றும் "டீ" தரத்திலும் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு "சீ" மற்றும் "டீ" தரத்தில் உள்ள 550 இற்கும் அதிகமான சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் காணப்படும் அதேவேளை அவற்றை விரைவில் அபிவிருத்தி செய்யவேண்டியுள்ளது.

உலக வங்கி செயற்றிட்டத்தின் ஊடாக 2015-2020 காலப்பகுதியில் தெரிவு செய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் அபிவிருத்தி உட்பட ஆரம்ப பராய சிறுவர் அபிவிருத்திக்காக 10 இலட்சம் அமெரிக்க டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் நிதியொதுக்கீட்டில் அமைச்சின் ஊடாக 2020 ஆம் ஆண்டிற்குள் பெருந்தோட்டதுறை சார்ந்த 100 சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. 2017 ஆரம்பத்தில் ரூ.16 மில்லியன் செலவில் 21 சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள அதேவேளை இவ்வருடததிலும் ரூ.16 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இச்செயற்பாடுகள் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக இடம்பெறுகின்றது.

**2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் நிர்மாணம் / புனரமைப்பு (2017.09.30 வரை)**

| அமுல்படுத்தும் நிறுவனம் | எண்ணிக்கை | முன்னேற்றம் - பிரதேச மட்டத்தில் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | கேகாலை | ஹட்டன் | இரத்தினபுரி | காலி | கண்டி |
| பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் | 19 | 9 | 2 | 3 | 4 | 1 |

## 6.2.5. அடைவுப் பதைகள்

போக்கவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக தோட்டப் பாதைகளை புனரமைத்தல், அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ளது. மக்களின் அன்றாட போக்குவரத்து, உற்பத்திகள் மற்றும் விற்பனைப் பொருட்களை கொண்டு செல்லல், நோயளர்களை அவசர சிகிச்சைகளுக்காக கொண்டு செல்லல் போன்ற செயற்பாடுகளுக்காக சீரற்று காணப்படும் தோட்டப் பாதைகளை புனரமைத்தல்/ அபிவிருத்தி செய்தல் அத்தியவசியமான செயற்பாடாகும்.

அதற்கமைய இவ்வமைச்சின் நிதியொதுக்கீட்டின் கீழ் பெருந்தோட்ட மக்களை இலக்காகக் கொண்டு அடைவுப் பாதைகளை வழங்குதல், படிகட்டுகள், வடிகாலமைப்பு கட்டமைப்புகளை அபிவிருத்தி செய்தல், பாதுகாப்பு சுவர்களை அமைத்தல், முக்கியமாக அரச வைத்தியசாலைகளுக்கு செல்வதற்கு ஒழுங்கான பாதைகள் அற்ற தோட்டங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படுகின்றது. இச்செயற்பாடுகளுக்காக 2017 ஆம் ஆண்டில் ரூ.125 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் (25 கி.மீ) இச்செயற்றிட்டங்கள் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக இடம்பெறுகின்றது.

## 6.2.6. பொது வசதிகளை வழங்குதல்

விளையாட்டு வசதிகளையும் பெருந்தோட்ட ட மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு அத்தியவசியமான ஏனைய வசதிகளையும் விசேடமாக சமய மற்றும் கலாசார நிலையங்கள் போன்றவற்றை அபிவிருத்தி செய்தல், நலன்புரி நிலையங்களுக்கான உபகரணங்களைப் பெற்றுக்கொடுத்தல் போன்ற செயற்பாடுகள் இதன் கீழ் இடம்பெறுகின்றது. 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் பொது வசதிகளை வழங்குவதற்காக அமைச்சினால் ரூ.255 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில் 500 செயற்றிட்டங்களுக்காக ரூ. 226 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் தற்போதைய நிதி முன்னேற்றம் ரூ 29 மில்லியன்.

**பின்தங்கிய பிரதேசங்களின் அபிவிருத்திக்காக 2017 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள செயற்றிட்டங்கள்**

| கருத்திட்டத்தின் தன்மை | அமுல்படுத்தும் நிறுவனம் | | மொத்த கருத்திட்டங்கள் /அலகுகளின் எண்ணிக்கை | 2017.09.30 ஆந் திகதிக்கு பூர்த்தி செய்யப்பட்டவை | அங்கீகரிக்கப்பட்ட தொகை (ரூ.மி) | 2017.09.30 செலவினம் (ரூ.மி) | நிதி முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|---|---|
| | PHDT | பி.செ./ பி.ச. | | | | | |
| கூரைகளை மீளப்பொருத்தல் | ✓ | ✓ | 1640 | 60.00 | 452 | 25.4 | 42.3 |
| நீர் விநியோகம் | ✓ | ✓ | 80 | 36.40 | 62 | 4.02 | 11.4 |
| மலசலகூடம் நிர்மாணித்தல் | ✓ | ✓ | 650 | 37.00 | 589 | 16.62 | 44.9 |
| சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை நவீனமயப்படுத்தல் | ✓ | | 23 | 16 | 19 | 1.56 | 9.75 |
| வைத்தியசாலைகளுக்கான வீதி அபிவிருத்தி கருத்திட்டங்கள் | ✓ | | 15 | 125 | 9 | | |
| விளையாட்டு மைதானங்கள்/ அடைவுப் பாதைகள்/ சமய கலாசார நிலையங்கள்/ பொது வசதிகள் | ✓<br>✓<br>✓ | ✓ | 500 | 225.60 | 405 | 58.90 | 26.1 |
| | | | | 500.00 | | 106.5 | 21.3 |

## 6.3. வாழ்வாதார அபிவிருத்தி

தற்போதைய தொழில்நுட்ப முன்னேற்றத்துடன் பெருந்தோட்டதுறை பல சவால்களை சந்தித்து வருகின்றது. அதற்கு முக்கிய காரணமாக அமைவது நிகழ்கால சமுதயாம் தற்போது காணப்படும் பாரம்பரிய முறைகளை பின்பற்றுவதில் காட்டும் பின்னடைவு மற்றும் உழைப்புக்கு அதிக ஊதியம், சமூகத்தில் ஏற்றுக்கொள்ளும் தன்மையை எதிர்ப்பார்த்தல் போன்றனவாகும். இங்கு பாரம்பரிய முறைகளும், குறைவான ஊதியமும் இத்துறை மீதான அவர்களின் ஈடுபாட்டை குறைவடையச் செய்கின்றது. இதன் விளைவு பெருந்தோட்ட சமுதாயம் முறையான பயிற்சி மற்றும் திறன் இல்லாமல் வெவ்வேறு நோக்கங்களுடன் தெளிவற்ற எதிர்காலத்திற்குள் பிரவேசிப்பதாகும்.

## 6.3.1. சமுதாயத்தை தெளிவுபடுத்தல்

அதிமேதகு ஜனாதிபதியினால் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ள தேசிய தேவையொன்றாக கருதப்படுகின்ற சுகாதாரம் மற்றும் போஷாக்கு நிலைமையை மேம்படுத்தல், சிறுநீரக நோயை கட்டுப்படுத்தல், போதைவஸ்து ஒழிப்பு, சுற்றாடல் பாதுகாப்பு போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தி தோட்டப்புற சமுதாயத்தை விழிப்புணர்வூட்டுவதற்காக 2015-2016 ஆண்டு காலப்பகுதியில் ரூ.5 மில்லியன் வரை செலவிடப்பட்டுள்ளது. 2020 ஆண்டிற்குள் 1000 விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் போசாக்கு மட்டுமன்றி எண்ணங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் அவர்களை சிறந்த திசையில் கொண்டு செல்வதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளது. இவற்றுக்கு மேலதிகமாக பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் பிராந்திய காரியாலயங்களின் ஊடாக சுழல் மற்றும் நீர் பாதுக்காப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றது. இந்நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 2017 ஆம் ஆண்டில் ரூ.10 மில்லியன் நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது. செப்டெம்பர் மாத இறுதி வரை ரூ.5 மில்லியன் செலவிடப்பட்டு 78% முன்னேற்றத்துடன் 155 நிகழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளன.

### 6.3.2. வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம்

பலமிக்க பொருளாதார சக்தியுடன் கூடிய மக்கள் சமுதாயத்தை கட்டியெழுப்பி, ஐக்கிய நாடுகளின் பேண்தகு அபிவிருத்தியின் முதற் கட்டமாக வறுமை ஒழிப்புக்காக அதிமேதகு ஜனாதிபதியின் பேரார்வத்திற்கு அமைய 2030 ஆம் ஆண்டளவில் வறுமை நிலையற்ற இலங்கையை உருவாக்கும் நோக்குடன், 2017 ம் ஆண்டு " வறுமை ஒழிப்பு வருடம்" என பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

உயர் வறுமை சுட்டிக்கு உரிமை கோரும் பெருந்தோட்ட மக்களை இலக்காகக் கொண்டு சுயதொழில் அபிவிருத்தி, உணவு பாதுகாப்பு மற்றும் போசாக்கு, சிறிய அளவிலான வீட்டுத்தோட்ட வளர்ப்பு, வீடுகள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் வீட்டுத் தோட்டம் வளர்த்தல், நன்னீர் மீன் வளர்ப்பு, மற்றும் கைவிடப்பட்ட நிலங்களில் பயிர்ச்செய்கை போன்ற வெவ்வேறு செயற்றிட்டங்களுக்காக அமைச்சினால் ரூ.30 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2017.09.30 வரையில் 1050 நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சித் திட்டங்களை மேலும் வினைத்திறனுடன் மேற்கொள்வதற்காக சுயதெழில் நுண்கடன் வழங்க இலங்கை வங்கியுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 6.3.3. திறன் அபிவிருத்தி மற்றும் இளைஞர் வலுவூட்டல்

க.பொ.த (உ/த) மற்றும் க.பொ.த (சா/த) பின்னர் கல்வியை தொடராத மாணவர்களுக்காக முறையான வாழ்வாதார பயிற்சிகளை வழங்குவதற்கு தேவையான வழிகாட்டல் மற்றும் தொழிற்பயிற்சியை வழங்குதல் போன்றன இந்நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். அதனடிப்படையில் இவ்வமைச்சின் கீழ் இயங்கும் பிரஜாசக்தி செயற்றிட்டத்தின் ஊடாக 1000 இற்கும் மேற்பட்ட பெருந்தோட்ட இளைஞர்களை நோக்காகக் கொண்டு 30 நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளை 2017 ஆம் ஆண்டில் இந்நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூ.10 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.3.4. சமூக அபிவிருத்திக்கான வசதிகளை வழங்குதல்

தலைமைத்துவ பயிற்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக மக்களின் பங்களிப்பையும், உத்வேகத்தையும் அதிகரிப்பதற்கான முயற்சிகளில் அமைச்சு ஈடுபட்டுவருகின்றது. இதற்காக சமூக அபிவிருத்தி நிலையங்களை அபிவிருத்தி செய்யவும், புதிய நிலையங்களை அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் ஹட்டன் நோர்வூடில் அமைந்துள்ள விளையாட்டுத் தொகுதியை அபிவிருத்தி செய்வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் முக்கிய நோக்கம் ஹட்டன் பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலைகளிலும், இளைஞர் சமூகத்தினரிடையேயும் விளையாட்டு திறமைகளை வளர்ப்பதாகும். இதற்காக இவ்வருடத்தில் ரூ.10 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2017.09.30 ம் திகதி வரையில் ரூ.5 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.







# 07

## அமைச்சினால் 2017 ஆம் ஆண்டில் பெறறுக்கொள்ளப்பட்ட விசேட வெற்றிகள்

### 7.1. பெருந்தோட்ட மக்களின் நில உரிமையை உறுதிப்படுத்துதல்

முதன் முறையாக பெருந்தோட்ட மக்களுக்காகன நில உரிமையை வழங்கும் வைபவம் அதிமேதகு ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவர்களின் தலைமையில் 2017.02.09 ஆம் திகதி இடம்பெற்றது. அதன் போது அக்கரபத்தனை ஹூட்வில் தோட்டத்தைச் சேர்ந்த 71 பயனாளிகளுக்கு தூய காணி உறுதிகள் வழங்கப்பட்டது.

### 7.2. 10,000 புதிய வீடுகளை அமைப்பதற்கு இந்திய அரசாங்கத்தின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது

இந்தி பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் இலங்கைக்கான விஜயத்தின் போது இந்திய வம்சாவளியினரான பெருந்தோட்ட மக்கள் மத்தியில் உரையாற்றுவதற்கான வாய்ப்பை ஏற்படு-த்திக் கொடுக்கும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தின் போது இந்திய அரசாங்கத்தின் நன்கொடையுடன் 10,000 புதிய வீடுகளை அமைத்துக் கொடுப்பதாக உறுதியளித்துள்ளார்

### 7.3. பயனாளிகளால் கட்டும் முறை அறிமுகப்படுத்தப்பட்டமை

ஒப்பந்த அடிப்படையில் வீடுகளை நிர்மாணிக்கும் போது ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வாக ஒப்பந்தகாரர்களை மையமாகக் கொண்டு அமைக்கப்படும் முறைக்கு மாற்றீடாக நிர்மாணப் பணிகளுக்கான நிதியை பயனாளிகளுக்கு வழங்குவதன் மூலம் அவர்களின் உடல் உழைப்பின் மூலமாக வீடுகளை நிர்மாணிக்கும் முறையினூடாக சிறந்த தரத்திலான வீடுகளை பெருந்தோட்ட மக்களுக்கு உரித்தாக்குதல்

### 7.4. பெருந்தோட்ட சிறுவர்களுக்கான உப உணவுகளை வழங்குதல்

ஜனாதிபதி செயலகம், சுகாதார மற்றும் போசணை செயலகம் என்பன இணைந்து தயார் செய்த போசாக்கு தொடர்பான பல்துறை தேசிய நடவடிக்கைத் திட்டத்தின் (2017-2020) மூலம் இவ்வமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள விடயமாவது மந்தபோஷாக்கு நிலையில் உயர் சுட்டிகளை காட்டும் பெருந்தோட்ட சிறுவர்களது ஊட்டச்சத்தை அதிகரிப்பதற்கான நீண்டகால நிகழ்ச்சித் திட்டமொன்றை வகுப்பதாகும். இதன் ஓர் கட்டமாக 3-5 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கான உப உணவுத் திட்டம் ஒன்றை ஆரம்பித்து முன்னெடுத்து செல்லல்.

### 7.5. ஹட்டன் பூல்பேங்க் தொழிற்பயிற்சி நிலையத்தை தரம் உயர்த்துதல

பெருந்தோட்ட துறையைச் சேர்ந்த இளைஞர்களுக்கு காலத்திற்கேற்ற தொழிற்பயிற்சிகளை வழங்கும் நோக்குடன் ஹட்டன் பூல்பேங்க் தொழிற்பயிற்சி நிலையம் ரூ.199 மில்லியன் இந்திய நன்கொடையுடன் தரம் உயர்த்தப்படுவதற்காக இந்திய அரசாங்கத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்-திடப்பட்டுள்ளது.

# 08

# அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்கள்

## 8.1. பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம்

### 8.1.1. பின்னணி

பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியமானது பெருந்தோட்டத்துறையில் வாழும் மக்களின் வாழ்வாதார வழிமுறைகளை மேம்படுத்துவதற்காக முதலில் “தோட்டப்புற வீடு மற்றும் சமூக அபிவிருத்தி நிதியம்” என்ற பெயரிலான ஒரு நிறுவனமாக 1982இன் 17ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 1992 செப்டெம்பர் மாதம் 18ஆந் திகதி தாபிக்கப்பட்ட கம்பனியொன்றாகும். இந்த நிறுவனம் பின்னர் 2002 ஒக்டோபர் மாதம் 25ஆந் திகதி “பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம்” என பெயர் மாற்றத்திற்கு உட்படுத்தப்பட்டது. தற்போது இந்த நிதியம் 2007ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீள்பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி இலக்குகளை அடைந்துகொள்ளும் பொருட்டு பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தினால் பின்வரும் நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

- தோட்டப்புற சமுதாயத்தின் லயன் அறைகளுக்கு பதிலாக தூய உறுதியுடன் கூடிய தனி வீடுகளை தகுதி வாய்ந்தவர்களுக்கு பெற்றுக்கொடுத்தல்
- பழைய லயன் அறைகளை புதுப்பித்தலும் அவற்றின் கூரைகளை மீளப்பொருத்தலும்
- நீர் விநியோகம் மற்றும் மலசலகூட வசதிகளை மேம்படுத்தல்
- சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை தாபித்தல் மற்றும் தகுதி வாய்ந்த சிறுவர் அபிவிருத்தி அலுவலர்களை இணங்காணல்
- சமுதாய அபிவிருத்திக் கருத்திட்டங்களை அமுல்படுத்தல் (வீதி / கட்டிடம் / சமய நிலையங்கள் போன்றன)
- சுகாதார வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதும் சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளும்
- சந்தைப்படுத்தல் வசதிகளுக்கான நடவடிக்கைகளை செய்துகொடுத்தல்
- வாழ்வாதார வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்

### 8.1.2. நிறுவன ஒழுங்கமைப்பு


பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியமானது மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கிவருகின்றது. இது பெருந்தோட்டத்துறையைச் சேர்ந்த பத்து இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களின் வாழ்க்கை நிலைமையை கட்டியெழுப்பும் பொருட்டு நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்து அதற்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக செயற்படுகின்ற, இலங்கை அரசு, பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள் மற்றும் தோட்டத்துறை தொழிற்சங்கங்களை உள்ளடக்கிய முத்தரப்பினரைக் கொண்ட ஒரு அமைப்பாகும்.

பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் தோட்டத்துறை தொழிலாளர்களின் நலனுக்கான உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் பலவற்றை அமுல்படுத்தும்

போது அரசாங்கத்தின் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள், தொழிற்சங்கள், பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகள், சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் வேறு உள்நாட்டு அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் அரச, தனியார் நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

கௌரவ அமைச்சரினால் நியமனம் செய்யப்படுகின்ற தவிசாளர் மற்றும் இலங்கை அரசாங்கம், பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகளைக் கொண்ட பணிப்பாளர் சபையின் கீழ் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் இயங்கி வருகின்றது. காலி, இரத்தினபுரி, பதுளை, கேகாலை, கண்டி, ஹட்டன் மற்றும் நுவரெலியா ஆகிய இடங்களில் அமைந்துள்ள பிராந்திய அலுவலகங்கள் 7இன் ஊடாக தலைமை அலுவலகத்தின் நடவடிக்கைகள் வலுவூட்டப்படுகின்றன. பிராந்திய பணிப்பாளர் சம்பந்தப்பட்ட பிராந்திய அலுவலகத்திற்கு தலைமை தாங்குவதுடன் தொழில்நுட்ப நிதிசார் மற்றும் முகாமைத்துவப் பதவியணியினர் அவருக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

## பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் பிரதேச கட்டமைப்பு



## 8.1.3. பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்துடன் தொடர்புபட்டுள்ள நிறுவனங்கள்

### தோட்டத் தொழிலாளர் வீடமைப்புக் கூட்டுறவுச் சங்கம்

தோட்டத் தொழிலாளர் வீடமைப்பு கூட்டுறவுச் சங்கம், கூட்டுறவுத் திணைக்களத்துடன் இணைந்து 1993இல் தாபிக்கப்பட்டது. பிரதானமாக வீடமைப்புக் கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக தாபிக்கப்பட்டுள்ள இந்த சங்கங்கள் தற்போது பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளால் நிர்வகிக்கப்படுகின்ற 435 தோட்டங்களை மையமாகக் கொண்டு இயங்கிவருகின்றன.

தற்போது தோட்டத் தொழிலாளர் வீடமைப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் 418 நாடு முழுவதிலும் (பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகள் மற்றும் அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற கம்பனிகளை மையமாகக் கொண்டு) தாபிக்கப்பட்டுள்ளன. மிகவும் வலுவான அனுசரணை காணப்படுகின்ற பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளின் தோட்டங்களை மையமாகக் கொண்டு தாபிக்கப்பட்டுள்ள இந்த கூட்டுறவுச் சங்கங்களில் பெரும்பாலானவை முன்னோடி சமுதாய அடிப்படையிலான அமைப்புகளாக நாட்டில் தாபிக்கப்பட்டுள்ளன. இவை பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் பிராந்திய அலுவலகங்களின் கண்காணிப்பின் கீழ் தகவுதிறன்களின் அடிப்படையிலான உயர் தரப்படுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் அவை தொடர்ச்சியாக கண்காணிப்புக்கும் உட்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த சங்கங்கள் “தோட்ட தொழிலாளர் வீடமைப்புக் கூட்டுறவுச்சங்க வங்கி” என்ற பெயரில் அவர்களினது வங்கியின் ஊடாக தமது நிதியை உழைத்துக்கொள்வதுடன் கடன் வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்கின்றது.

கடன் வழங்குவதற்கு மேலதிகமாக தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி தோட்டங்களில் வசிப்பவர்களின் சேவைசார் தேவைகளுக்கான இலகு அணுகு முறைகளை செய்து கொடுத்து தோட்ட தொழிலாளர் வீடமைப்பு கூட்டுறவுச் சங்கங்கள் சில்லறை பொருட்கள் / நலன்புரி வர்த்தக நிலையங்கள், சிகை அலங்கார நிலையம், தொடர்பாடல் நிலையங்கள் போன்ற வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் வசதி செய்துள்ளது. தோட்ட வீட்டு உரிமையாளர்களின் வாழ்க்கைத்தரம், அவர்களின் சுகாதாரம், போஷாக்கு, சுகாதார வசதி மற்றும் சுத்தம் போன்றவற்றை மேம்படுத்துவதற்கு அவர்களுக்குத் தேவையான பொருட்களையும் சேவைகளையும் இலகுவாக அவர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு தோட்ட ஊழியர் வீடமைப்புக் கூட்டுறவுச் சங்கங்களை தமது துணைப்பிரதிநிதிகளாக பயன்படுத்தி பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தினால் பல்தேசிய கம்பனிகள் மற்றும் வேறு முன்னோடி தனியார் துறை அமைப்புக்களுடன் கூட்டாக செயற்படுகின்றன.

## 8.1.4. பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக அமுல்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள்

### 8.1.4.1. இவ்வமைச்சின் நிதியொதுக்கீட்டின் மூலம் அமுல்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள்

- **2017 புதிய வீடுகள்**

மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு 2017 ஆம் ஆண்டில் பெருந்தோட்ட மக்களுக்காக ரூ.2000 மில்லியன் செலவில் 2466 வீடுகள் அமைப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிர்மாணப்பணிகள் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் பிராந்திய காரியாலயங்கள் ஊடாக இடம்பெறுகின்றது. 1993 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை பெருந்தோட்ட வீடமைப்புக்காக ஒதுக்கப்பபட்ட அதிகபட்டச தொகை இதுவாகும். 2017.09.30 வரையில் 30% ஆன நிதி பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்திற்காக வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் பயனாளிகளினால் கட்டும் முறையிலான வீடமைப்புத் திட்டங்கள் அமைச்சின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் பெருந்தோட்ட மனிதவள அபவிருத்தி நிதியத்தின் ஊடாக நுவரெலியா

பிராந்தியம் தவிர்ந்த ஏனைய பிராந்தியங்களில் அமுல்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் 136 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுவருகின்றது.

- **இடர்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வீடுகள் - 2017**

அமைச்சினால் 2017 ஆம் ஆண்டில் காலி, ஹட்டன், இரத்தினபுரி, பதுளை, மற்றும் கேகாலை ஆகிய பிரதேசங்களில் இடர்களினால் வீடுகளை இழந்த குடும்பங்களுக்காக 406 வீடுகள் வழங்கப்படவுள்ளது.

- **லயன் வீடுகளின் கூரைகளை மீளப்பொருத்துதல்**

புதிய வீடுகளை அமைக்கும் வரையில், இடைக்கால தீர்வாக பழுதடைந்துள்ள கூரைகளை மீளப்பொருத்துவதற்கான நடவக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளை பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் 7 பிராந்தியங்களில் இணங்காணப்பட்ட 761 லயன்களில் ரூ.28 மில்லியன் செலவில் இந்நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்பட்டுவருகின்றது. மேலும் 872 லயன்களுக்கான அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

- **மலசலகூட வசதிகளை வழங்குதல்**

பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக 489 செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்படும் அதேவேளை இதுவரை இச்செயற்றிட்டத்திற்காக ரூ.29 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

- **விசேட செயற்றிட்டங்கள் -2017**

இவற்றுக்கு மேலதிகமாக விசேட செயற்றிட்டங்களுக்காக ரூ.225 மில்லியனுக்கும் அதிகமான தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் நிர்மாணப்பணிகள், செயலமர்வுகள், பயிற்சிப் பட்டறைகள் அமுல்படுத்தப்படுகின்றது.

- **உப உணவுத் திட்டம்**



குழந்தைகளின் மந்தபோசாக்கு நிலையை கட்டுப்படுத்தவதற்காக பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக உப உணவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்காக ரூ.1.5 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

## 8.1.4.2. ஏனைய நிறுவனங்களின் நிதியொதுக்கீட்டின் மூலம் அமுல்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள்

- **ஆரம்ப பராய சிறுவர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

உலக வங்கியின் உதவியுடனும் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சுடனும் இணைந்து ஆரம்ப பராய சிறுவர் அபிவிருத்திக்கான ஐந்து வருட கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதன் ஒட்டுமொத்த முதலீடு சுமார் 10 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும். பெருந்தோட்டப் பிரதேசங்களில் வாழும் 3 - 5 வயதிற்கு இடைப்பட்ட சிறுவர்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளை போதியளவிலும், தரமாகவும் மேம்படுத்தவது இதன் நோக்கமாகும் என்பதுடன், இது 2020 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்படவுள்ளது.

இதன் கீழ் கட்டிடங்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் உபகரணங்கள் சகிதம் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் எண்ணிக்கை 140 ஆகும் என்பதுடன், தற்போது பெருந்தோட்டப் பிரதேசங்களில் மேம்படுத்தப்படவுள்ள சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் எண்ணிக்கை 175 ஆகும். மேலும் தேவையான உபகரணங்களுடன் புதிதாக 175 விளையாட்டு மைதானங்கள் நிர்மாணிக்கப்படுவதுடன், தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள 210 விளையாட்டு மைதானங்களை புதுப்பிக்கும் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறே சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் ஆசிரியர்கள் / உதவியாளர்களுக்கு ஆசிரியர்களுக்குத் தேவையான பயிற்சியைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் பெற்றோரை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களும் அமுல்படுத்தப்படுகின்றன.

2016 ஆம் ஆண்டில் 7 பெருந்தோட்டப் பிராந்தியங்களில் புதிதாக 28 சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை நிர்மாணிக்கவும், 35 நிலையங்களை மேம்படுத்தவும் தேவையான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், 42 விளையாட்டு மைதானங்களை நிர்மாணிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. சிறுவர் அபிவிருத்தி அலுவலர்கள் 206 பேருக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டுள்ளன. மேலும், முதல் தடவையாக சனத்தொகை, புள்ளிவிபரவியல் திணைக்களத்துடன் இணைந்து பெற்றோர்களுக்காகன விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் 49 நடத்தப்பட்டுள்ளன. அதேபோல் பாலர் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் தொடர்பான கணக்கெடுப்பை நடாத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

- **நீர் வழங்கல் மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் செயற்றிட்டம்**

உலக வங்கியின் உதவியின் கீழ் நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சுடன் இணைந்து பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தினால் நுவரெலியா மற்றும் ஹட்டனில் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களை சேர்ந்த 15,800 வீட்டு அலகுகளை இலக்காகக் கொண்டு கிராமிய நீர் வழங்கல் செயற்றிட்டங்கள் 130 உம், 7,300 வீட்டு அலகுகளை இலக்காகக் கொண்டு மலசலகூடங்களும் நிர்மாணிக்கப்படவுள்ளன. இந்தக் கருத்திட்டத்திற்கான ஒட்டுமொத்த செலவினம் 14 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இது 2020 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்படவுள்ளது.

2017 ஆம் ஆண்டில் முதற் கட்டமாக 9,740 வீடுகளுக்கு பயனளிக்கும் வகையில் 35 நீர் வழங்கல் செயற்றிட்டங்களும் ஹட்டன், நுவரெலியா மற்றும் கண்டி பிரதேசங்களை உள்ளடக்கியதாக 12 செயற்றிட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இது தொடர்பான செயலாக்க மதிப்பீட்டு நடவக்கைகள் முடிவடைந்து அளவிடல் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது. மலசலகூடங்கள் அமைப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது.









## 8.2. பிரஜாசக்தி கண்காணிப்பு பிரிவு

பிரஜாசக்தி கண்காணிப்பு பிரிவின் கீழ் செயற்பட்டு வரும் ஹட்டன் பூல்பேங்க் தொழிற்பயிற்சி நிலையம், நோர்வூட் விளையாட்டுத் தொகுதி, ரம்பொட கலாசார நிலையம் மற்றும் பிரஜா சக்தி நிலையங்கள் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் ஊடாக 2016.07.20ஆந் திகதி முதல் இந்த அமைச்சின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் பொறுப்பேற்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இதற்கமைய இல 45, புனித மைக்கல் வீதி, கொள்ளுபிட்டியில் அமைந்துள்ள அமைச்சில் பிரஜாசக்தி கண்காணிப்பு பிரிவு இயங்கி வருகின்றது. இதன்மூலம் அமைச்சின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இந்நான்கு நிறுவனங்களும் இயங்கி வருகின்றது.

### 8.2.1. பிரஜா சக்தி அபிவிருத்தி செயற்றிட்டம்

தகவல் தொடர்புசாதன தொழில்நுட்பத்தை பரவலாகப் பயன்படுத்தும் குறைந்த வரப்பிரசாதம் பெற்றுள்ள மலையக மக்களுக்கு பூரணமான மற்றும் பரந்தளவிலான சமூக பொருளாதார அபிவிருத்தியை உரித்தாக்கிக்கொடுப்பது இந்த கருத்திட்டத்தின் நோக்கமாகும். பெருந்தோட்ட பகுதிகளை உள்ளடக்கி 44 நிலையங்கள் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கிராமிய மற்றும் தோட்டப் பிரதேசங்களில் முதலாம் ஆண்டு தொடக்கம் உயர்தர மாணவர்கள் வரையிலும், பாடசாலை இடைவிலகியவர்களுக்கும் கணினி கல்வியை வழங்குவதை நோக்காகக் கொண்டு இந்நிலையங்கள் இயங்கி வருகின்றன. கல்வி நோக்கங்களுக்காக இணைய வசதிகள் தேவைப்படுபவர்களுக்காக இலவசமாக அச்சேவைகளை வழங்குவதற்கும், நூலக வசதிகளை வழங்குவதன் மூலம் அவர்களின் வாசிப்பு திறனை விருத்தி செய்வதற்கும், கவிதை நாடகம், பேச்சுப் போட்டிகள் ஊடாக அவர்களன் திறனை வளர்ப்பதற்கும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளது.

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தரவுகளின் அடிப்படையில் இலங்கையில் வேலையின்மை, பெருத்தமற்ற தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களின் சுட்டி பெருந்தோட்டத் துறையில் உயர் விகிதத்தைக் காட்டுகின்றது. இந்நிலையை மாற்றுவதற்காக தோட்டப் பிரதேசங்களை இலக்காகக் கொண்டு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் இளைஞர் வலுவூட்டலுக்காக விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்படும் அதேவேளை இதன் மூலம் தொழிற் சந்தையினுள் பிரவேசிப்பது, சுய தொழிலில் ஈடுபடுவது, தேவையான வழிகாட்டல்களும் வழங்கப்படுகின்றது.

### 2017 ஆம் ஆண்டின் விசேட செயற்றிட்டங்கள் பெண்களை வலுவூட்டல் - பயிற்சி அளித்தல்

சமூக பொருளாதார மற்றும் அரசியல் விடயங்களில் பெருந்தோட்ட பெண்களின் பங்குபற்றுதலை அதிகரிப்பதற்கும், பலப்படுத்துவதற்கும் அமைச்சின் நிதியொதுக்கீட்ன் மூலம் பிரஜாசக்தி நிலையங்கள் ஊடாக விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதுடன் அதனூடாக பென்கள் அமைப்புக்களை வலுப்படுத்தவும் அதன் மூலம் புதிய வருமானம் ஈட்டும் வழிமுறைகளை உருவாக்குவதற்குமான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுவருகின்றது. இது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் 500 பெண்களை மையமாகக் கொண்டு 4 நிகழ்ச்சித் திட்டங்களின் மூலமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அதேவேளை மேலும் பல நிகழ்ச்த்திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன.

### 8.2.2. ஹட்டன் பூல்பேங்க் தொழிற்பயிற்சி நிலையம்

தொழிற்பயிற்சி அதிகாரசபையின் கீழ் காணப்பட்ட இந்த நிலையம் 2007 மார்ச் மாதம் தொண்டமான் மன்றத்தின் முகாமைத்துவத்தினால் பொறுப்பேற்கப்பட்டட்டு 2016 ஆம் ஆண்டில் அமைச்சின் நேரடி கண்காணிப்பின் கீழ் இயங்குகின்றது. இந்திய அரசாங்கத்தின் நிதி அனுசரணையின் கீழ் விசேட பயிற்றுவிப்பாளர்கள் 7 பேரின் சேவை அப்போது இந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2017 செப்டெம்பர் மாதத்துடன் அவர்களின் ஒப்பந்த காலம் நிறைவடைந்துள்ளது. தற்போது இத் தொழிற்பயிற்சி நிலையத்தின் ஊடாக 12 பாடநெறிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவற்றுக்கு மேலதிகமாக க.பொ.த (உ/த) பொறியியல் தொழில்நுட்பம் கற்கும் மாணவர்களுக்கான தமிழ்

மொழி மூல வகுப்புகள் நடைபெறுகின்றது. இவ்வகுப்புக்களுக்காக பதுளை, மாத்தளை, கொட்டகலை, மற்றும் புஸ்ஸல்லாவ ஆகிய பிரதேசங்களில் இருந்து மாணவர்கள் வருகைதருகின்றனர்.

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் இத்தொழிற்பயிற்சி நிலையத்தை தரமுயர்த்துவதற்காக இந்திய உயர் ஸ்தானிகருடன் இலங்கை அரசாங்கம் சார்பில் 2017.09.20 ஆம் திகதி அமைச்சின் செயலாளர் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையொப்பமிட்டத்தை அடுத்து ரூ.199 மில்லியன் நன்கொடை வழங்கப்பட்டு கட்டிடத்தினை நவீனமயப்படுத்தல், உபகரணங்கள் கொள்வனவு செய்தல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஆண்டொன்றிற்கு 400 பேருக்கு பயிற்சி வழங்க்கக்கூடிய வசதிகள் இந்நிலையத்தில் காணப்படுவதுடன் 2017 ஆம் ஆண்டில் 12 பயிற்சி நெறிகளுக்காக 335 மாணவர்கள் பதிவு செய்துள்ளனர். இதில் மோட்டார் வாகன தொழில்நுட்ப பயிற்சி நெறியை முடித்த மாணவர்கள் முழுமையான மோட்டார் வண் ஒன்றை நிர்மாணித்தமை விசேட வெற்றியாகும்.

### 8.2.3. இறம்பொடை கலாசார நிலையம்

குறைந்த வசதிகளைக் கொண்ட பெருந்தோட்ட சமுதாயத்தினரின் கலாசார மற்றும் கலைத்திறன்களை வளர்க்கும் நோக்கத்துடன் இந்த நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டு தொடக்கம் ஆசிரியர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் முழுநேர அடிப்படையில் கர்நாடக இசை, வீணை, மிருதங்கம், வயலின் வாசிப்பதற்கான பயிற்சிகள் இதன் மூலம் வழங்கப்பட்டன. தற்போது இந்த கலாசார நிறையத்தை பல்கலைகழகத்துடன் இணைத்து பயிற்சி நெறிகளை தொடர்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. திருமண வைபவங்களுக்கும் வேறு கலாசார வைபவங்களுக்கும் இந்த நிலையம் வழங்கப்பட்டுவருகின்றது.

### 2017 ஆம் ஆண்டில் பூல்பேங்க் தொழிற்பயிற்சி நிலையத்தில் பாடநெறிகளுக்காக பதிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் விபரம்

| இல | பாடநெறி | பதிவு | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மார்ச் - டிசெம்பர் 2016 | | | மார்ச் - ஜுன் | | | ஜுலை - டிசெம்பர் 2016 | | |
| | | ஆ | பெ | மொ | ஆ | பெ | மொ | ஆ | பெ | மொ |
| 1 | மோட்டார் தொழில்நுட்பம் | 20 | - | **20** | - | - | - | - | - | - |
| 2 | மின் நுட்பவியலாளர் | 20 | - | **20** | - | - | - | - | - | - |
| 3 | தொழில்நுட்ப கலைஞர் | 14 | - | **14** | - | - | - | - | - | - |
| 4 | வானொலி தொலைக்காட்சி புதுப்ப-ித்தல் | 7 | 1 | 8 | - | - | - | - | - | - |
| 5 | அலுமினியம் பெப்ரிகேட்டர் | - | - | - | 15 | - | **15** | 18 | - | **18** |
| 6 | ஆடை தைத்தல் | - | - | - | - | 29 | **29** | - | 26 | **26** |
| 7 | வீட்டு மின்நுட்பவியலாளர் | - | - | - | 6 | 4 | **10** | 10 | 2 | **12** |
| 8 | ஹொட்டல் முகாமைத்துவம் | - | - | - | 12 | 12 | **24** | 11 | 4 | **15** |
| 9 | தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பம் | - | - | - | 13 | 13 | **26** | 5 | 14 | **19** |
| 10 | மோட்டார் சைக்கிள் தொழில்நுட்பவியலாளர் | - | - | - | 20 | - | **20** | 17 | - | **17** |
| 11 | உருக்கிஓட்டுநர் கலை | - | - | - | 13 | - | **13** | 11 | - | **11** |
| 12 | தச்சு வேலை | - | - | - | 11 | - | **11** | 7 | - | **7** |
| | மொத்தம் | 61 | 1 | **62** | 90 | 58 | **148** | 79 | 46 | **125** |

## 8.2.4. நோர்வூட் விளையாட்டுத் தொகுதி

தற்போது இவ்விளையாட்டு தொகுதி அமைச்சின் நேரடி நிர்வாகத்தின் கீழ் தொழிற்படுகின்றது. இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் 2011ஆம் அண்டில் ரூ. 25 மில்லியன் செலவிடப்பட்டு இந்த விளையாட்டு தொகுதி அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

அமைச்சின் நிதியொதுக்கீட்டின் மூலம் 2017 ஆம் ஆண்டில் சில அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அருகில் உள்ள பாடசாலைகள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள் பல்வேறு நிகழ்ச்சிகளுக்காக இவ்விளையாட்டுத் தொகுதியைப் பயன்படுத்தி வருகின்றன.








# 09

## அமைச்சின் எதிர்பார்ப்புகளும் 2018 ஆம் ஆண்டிற்கான முதலீடுகளும்

2018 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீடானது பின்தங்கிய நிலையில் உள்ள பெருந்தோட்ட சமுதாயத்தின் சமூக அபிவிருத்திக்காக தயாரிக்கப்பட்டுள்ள தேசிய நடவடிக்கை திட்டத்தில் (2016-2020) குறிப்பிடப்பட்டுள்ள குறிகாட்டிகளை அடைவதை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. அமைச்சானது மேற்கூறப்பட்ட இலக்கை அடைவதற்காக அதனுடன் தொடர்புடைய பங்குதாரர்கள், அமைச்சுகள், சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்காக பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

தேசிய நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வீடமைப்பை (2020 ஆம் ஆண்டில் 56,500 வீடுகள்) இலக்காகக் கொண்டு உயர்ந்த மலைப்பிரதேசங்களிலும், மண்சரிவு அபாயங்களுக்கும் வேறு இயற்கை அனர்த்தங்களுக்கும் முகம்கொடுத்து வரும் பெருந்தோட்ட மக்களுக்கு முன்னுரிமை வழங்கி, குடிநீர், மின்சாரம், மலசலகூட வசதிகள் போன்ற அனைத்து அத்தியவசியமான வசதிகளையும் உள்ளடக்கி 2018 ஆம் ஆண்டில் 2017ஆம் ஆண்டின் நீடிப்புகளையும் உள்ளடக்கி 7,000 வீடுகளை அமைப்பதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரசாங்கத்தின் திரட்டு நிதியிலிருந்து வரவு செலவு திட்டத்தின் மூலம் வழங்கப்படும் வீடமைப்புக்கான வருடாந்த ஒதுக்கீட்டிற்கு மேலதிகமாக இந்திய பிரதமர் கௌரவ நரேந்திர மோடி அவர்கள் தனது இலங்கைக்கான விஜயத்தின் போது பெருந்தோட்ட மக்களுக்கு 10,000 வீடுகளுக்கான நிதியுதவியை வழங்குவதற்கு ஒப்புதல் அளித்துள்ளார்.

அரசாங்கத்தின் திரட்டு நிதியிலிருந்து வருடாந்த வரவு செலவு திட்டத்தின் மூலம் ஒதுக்கப்படும் நிதியானது வெறுமனே தேசிய நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்களை பூர்த்தி செய்வதற்குகூட போதுமானதாக இல்லை. 2017 ஆம் ஆண்டின் இறுதியில் நிகழ்ச்சித் திட்டங்களுக்கான நிதியை திரட்டிக்கொள்வதற்காக நன்கொடையாளர்களின் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்ய அமைச்சு சில முனைப்புகளை மேற்கொண்டு வருகின்றது. இக்கூட்டத்தின் மூலம் தேசிய நடவடிக்கைத் திட்டத்தின் அனைத்து பங்குதாரர்களுக்கும் அவர்களது முன்னுரிமை அடிப்படையிலான வேலை திட்டத்தினை சமர்ப்பிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்படவுள்ளது. அமைச்சின் செயற்பாடுகளின் மிக முக்கிய கூறான வீடமைப்பினை துரிதப்படுத்தவதற்காக நெகிழ்வுத் தன்மையுடன் பயனாளிகளினால் கட்டும் முறை, அரச தனியார் கூட்டுடைமை, பரிட்சாத்த நடவடிக்கையாக "பெனல்" (Panel) வீடுகள் போன்ற முறைகளில் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டங்களின் வெற்றியுடன் 2018 ஆம் ஆண்டிலிருந்து ஒப்பந்ததாரார்களினால் கட்டப்படும் முறையில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வாகவும் அவற்றுக்கு பிரதியீடாகவும் சகல பெருந்தோட்ட பிரதேசங்களிலும் மேற்கூறப்பட்ட முறைகள் மேலும் விரிவுபடுத்தப்படவுள்ளன.

பெருந்தோட்ட சமுதாயத்தின் வாழ்வாதாரத்தையும் போசாக்கு நிலைமையையும் முன்னேற்றுவதற்காக மது ஒழிப்பு, சிறுநீர நோய்கள், சுகாதாரம், போசாக்கு மற்றும் சுழல் பாதுகாப்பு போன்ற விடயங்களை உள்ளடக்கிய நிகழ்ச்சித் திட்டங்களும் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டமும் 2018 ஆம் ஆண்டிலும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவுள்ளது. அதேபோன்று பெருந்தோட்ட பிரதேசங்களில் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் உள்ள 3-5 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை இலக்காகக் கொண்டு அவர்களை மந்தபோசாக்கு நிலையிலிருந்து பாதுகாப்பதற்காக 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட உப உணவு நிகழ்ச்சித் திட்டம் 2018 ஆம் ஆண்டிலும் பரிட்சாத்த நடவடிக்கைகளின் பின்னர் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ளது. அத்துடன் முறையான பயிற்சிகளின்றி இளைஞர்கள் தொழிற்சந்தையில் பிரவேசிப்பதை தடுப்பதற்காக ஹட்டன் பூல்பேங் தொழிற்பயிற்சி நிலையம் இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் புதிய இயந்திரங்களையும் பயிற்சிநெறியளையும் அறிமுகப்படுத்துவதன் மூலம் தரமுயர்த்தப்படவுள்ளது.

பெருந்தோட்ட சமுதாயத்தின் நில உரிமையை உறுதி செய்வதற்காக தூய காணி உறுதிகளை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் 2018 ஆம் ஆண்டிலும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படவுள்ளது. 6624 வீடமைப்புத் திட்ட பயனாளிகளுக்கு காணி உறுதிகளை வழங்குவதற்கான அமைச்சரவை அங்கீகாரம் ஏற்கனவே பெறப்பட்டுள்ளது. பெருந்தோட்ட சமுதாயத்தின் சமூக அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு பெரும் தடையாக உள்ள சமூக பொருளாதார தரவுகளை உள்ளடக்கிய தரவு தளம் ஒன்னை அமைப்பதற்கான நடவடிக்கைகள் அமைச்சினால் மேற்கொள்ளப்படவுள்ள அதேவேளை தேசிய நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று அதனை 2018 ஆம் ஆணடளவில் நிறைவு செய்வதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

# 10

# අමාත්‍යාංශයේ සංවර්ධන ක්‍රියාකාරකම්























වැවිලි ප්‍රජාව මෙතෙක් මුහුණ දුන් සමාජ විෂමතාවන් තුරන්කොට, ඔවුන් අභිමානවත් ග්‍රාමීය ප්‍රජාවක් ලෙස පරිණාමනය කිරීමේ අරමුණින් ආරම්භ කළ කඳුරට නව ගම්මාන, යටිතල පහසුකම් හා ප්‍රජා සංවර්ධන අමාත්‍යාංශය, වැවිලි ප්‍රදේශ කේන්ද්‍රගත කර ගනිමින් ජීවත්වන මිලියනයකට අධික වැවිලි ප්‍රජාවගේ සමාජ, ආර්ථික සංවර්ධනය නිසි දිශානතියක් ඔස්සේ මනා අධීක්ෂණයකින් යුතුව ක්‍රියාත්මක කිරීම සඳහා අවතීර්ණ වී ඇත.

பெருந்தோட்ட மக்கள் இதுவரை முகம்கொடுத்து வந்த சமூக முரண்பாடுகளை நீக்கி அவர்களை கௌரவமான கிராமிய சமூகமாக பரினமிக்கச் செய்யும் நோக்குடன் மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு பெருந்தோட்ட பகுதிகளை மையமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்ற ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட மக்களது சமூக, பொருளாதார அபிவிருத்தியை முறையான திசைமுகப்படுத்தலின் ஊடாகவும் சிறந்த மேற்பார்வையுடனும் மேற்கொள்ளும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்ள்ளது.

The Ministry of Hill Country New Villages, Infrastructure and Community Development was established with the intention of transforming the plantation community with dignity, by removing the social disparities they face, into a village community, giving proper direction for implementation & focusing on upliftment of the socio economic status of over one million population living in plantation areas.

**කඳුරට නව ගම්මාන, යටිතල පහසුකම් හා ප්‍රජා සංවර්ධන අමාත්‍යාංශය**

மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு

**Ministry of Hill Country New Villages, Infrastructure and Community Development**